இரண வைத்திய சிந்தாமணி

தாமரை நூலகம்
சென்னை - 600 026.

அனுபோக
இரணவைத்திய சிந்தாமணி

பதிப்பாசிரியர்
எஸ்.பி. ராமச்சந்திரன்

வெளியீடு

தாமரை நூலகம்
7, என்.ஜி.ஓ. காலனி, 3வது தெரு,
வடபழனி, சென்னை - 600 026.
தொலைபேசி எண் : 044 - 23620249

இரணவைத்திய சிந்தாமணி

தாமரை வெளியீடு எண் : 200
முதல் பதிப்பு : அக்டோபர் 1997
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 2016

நூலைப்பற்றி....

நூலின் பெயர்	:	**அனுபோக இரணவைத்திய சிந்தாமணி**
பதிப்பாசிரியர்	:	எஸ்.பி. ராமச்சந்திரன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என்.ஜி. காலனி, வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	அக்டோபர் 2016
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	21 செ.மீ. x 14 செ.மீ.
தாளின் தன்மை	:	14.2 கி. வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	64
பிரதிகள்	:	1000
பைண்டிங்	:	செக்ஷன்
நூலின் விலை	:	ரூ. 30-00
அச்சிட்டோர்	:	கிரியேடிவ் ஆப்செட் சென்னை - 600034

91/4

இரணவைத்திய சிந்தாமணி

பதிப்புரை

இரண வைத்தியம் சித்த வைத்தியத்தில் ஒரு தனிப் பிரிவு :-

எனக்குத் தெரிந்தவரை சுமார் அறுபது அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இரண வைத்தியத்திற்கென்று தனியாகச் சில வைத்தியர்கள் இருந்தார்கள். கோவைப் பகுதியில் சூலூர் நாராயண சாமி வைத்தியர் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கினார். வெகு தொலைவில் இருந்தெல்லாம் நோயாளிகளைக் கொண்டு வருவார்கள். ஒரு வாரம் இரு வாரம் அங்கேயே தங்கி வைத்தியம் செய்து கொண்டு போவார்கள்.

சித்த மருத்துவத்திற்கென்று தனி மருத்துவமனைகள் ஏற்பட வேண்டும். அவற்றின் ஒவ்வொரு துறைக்கும் தனிப்பிரிவு இருக்க வேண்டும். அப்பிரிவுகளில் கைதேர்ந்த வைத்தியர்கள் நோயாளி களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும்.

எலும்பு முறிவுகளுக்கு புத்தூர் வைத்தியர்.

எலும்பு கோணல்களுக்கு பீடம் பள்ளி வைத்தியர்.

என்ற இருப்பது போல் நீரிழிவு, ஆஸ்துமா, காமாலை, இரத்த அழுத்தம் போன்ற நோய்களைக் கவனிக்கச் சிறந்த வைத்தியர்களின் கீழ் தனித் தனிப் பிரிவுகள் இயங்க வேண்டும்.

அப்படி ஒரு நாள் வரும்!

வெகு விரைவில் வரும்!

சித்த மருத்துவப் பள்ளிகளில் மேல் பட்டப் படிப்புக்காவது ஆசனப் பயிற்சி யோகப் பயிற்சிகள் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று முன்பே குறிப்பிட்டிருந்தேன்.

ஒவ்வொரு துறையிலும் பெயர் பெற்றவர்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் திட்டம் ஒன்று உருவானால் இன்னும் நன்றாக இருக்கும்.

எஸ்.பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

இரணவைத்திய சிந்தாமணி

பொருளடக்கம்

91/4

உ

கடவுள் துணை

தற்காலம் சுதேசவைத்தியர்கள் கையாண்டுவரும்

அனுபோக இரணவைத்திய சிந்தாமணி

விநாயகர் துதி
கவி - விருத்தம்

அனுபோகரண வயித்தியமஞ்சரி
இனிய செந்தமிழாலு மியற்றிடக்
கனியெனப் பல்லோர்கண்டு களித்திடத்
தனியனைங்கரன் தாளிணைபோற்றுவோம்

முகவுரை - விருத்தம்

மாட்சிமையாய் நாற்பத்தெண் முனிவர்மூதோர்
மகிமையுள சித்தர்பதினெண்மரோடுங்
காட்சியாய் நவகோடி யிருடியானோர்
கண்டுரைத்த விருபத்தோர் லட்சங்கிரந்தம்
சாட்சியாய் முன்னோர் சொல்வாக்கின் வண்ணம்
சதுரான ரணவயித்திய சிந்தாமணியை
சூட்சியாய் பண்டிதர்கை முறைகள்வாங்கி
செஞ்சி யேகாம்பரமும் வெளியிட்டேனே.

இதுவுமது

வெளியிட்ட யிரண வயித்திய சிந்தாமணியை
விரும்பியே கையேந்திக் கண்ணுற்றோர்க்கு
ஒளிவுதரு மனுபோக சித்தியாகும்
உத்தமனே ஆசான்போ லுண்மைகாட்டும்

களியான விரணங்களெல்லாங் குடிவிட்டோடும்
குறித்தமுரை யணுவேறும் பிசகிராது
தெளிவான யின்னூலை தேடித்தேர்ந்து
தேசமெங்கும் இரணவயித்தியந் திகழாய்ச்செய்யே.

நூன்முகம்

சர்வ ரணங்களுக்கும் முலாம்

சாம்பிராணி	விராகனிடை	1 1/4
பால்த்துத்தம்	,,	,,
கருங்குங்கிலியம்	,,	,,
மயில்த்துத்தம்	,,	,,

இந்த நாலு தினுசுகளையும் பச்சைவெட்டாக. நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு நல்லெண்ணெய்விட்டு மைபோல் அரைத்து பின்பு அதில் முறையே தீராத ஏழுதரம் சலம்விட்டுக் கழுவி முலாமை வழித்தெடுத்து ஒரு பீங்கானில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு சிங்கி, நீர் விங்கி வழற்சிங்கி கால்களில் உண்டாகும் புத்து இவைகளுக்கு இந்த முலாமை சீலையிற்றடவி இரணத்தின்மேல்போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறி உலர்ந்துவிடும், நோய் தீரும்.

சதைகரைக்கவும் கிரந்திக்கும் முலாம்

நல்லெண்ணெய்	பலம்	1
பாஷாணம்	காசிடை	,,
அரிதாரம்	,,	,,
மயில்த்துத்தம்	,,	4
சிவந்தகுங்கிலியம்	,,	6

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய்விட்டு மைபோல் அரைத்துப் பின்பு அதில் முறையே ஏழு தரம் சலம்விட்டுக் கழுவி முலாமை வழித்தெடுத்து ஒருயேனத்தில் வைத்துக் கொண்டு சதைவளர்ந்திருக்கும் இரணங்களுக்கும் கிரந்திக்கும் இந்த முலாமைச் சீலையில் தடவிப்போட்டுக் கொண்டுவர சதையைக் கரைக்கும் கிரந்தி முதலான இரணங்களை ஆற்றும்.

சிங்கிரணத்திற்குப் பச்சைச் சேர்வை சீலை

இலிங்கம்	விராகனிடை	1 1/4
மயில்த்துத்தம்	,,	2 1/2
மிருதார்சிங்கி	,,	5/8
குங்கிலியம்	,,	3

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய்விட்டு மைபோல் அரைத்துபின்பு சலம்விட்டுக் கலக்கிக்கழுவியெடுத்துப் பத்திரப்படுத்திவைத்துக் கொண்டு இரத்தசிங்கி கிரந்தி தடிப்பு திமிர் நீர்பாச்சல் இவைகளுக்கு இந்தச் சேர்வையை சீலையில் நனைத்து போட்டுக்கொண்டுவர சகலரணங்களும் ஆறும் முளைவெளியாகும்.

வேறுவித பச்சைச் சேர்வை சீலை

கெவுரிபாஷாணம்	விராகனிடை	1 1/4
அரிதாரம்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
குங்கிலியம்	,,	,,

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய்விட்டு மைபோல் அரைத்துபின்பு சலம்விட்டு அரைத்துக்கழுவி வழித்து ஒரு யேனத்தில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு சிங்கி பிளவை சதைவளர்ந்திருக்கும் ரணம் முளை ஆறாத இரணங்கள் இவைகட்கு இந்தச் சேர்வையை சீலையில் தடவிபோட்டுக் கொண்டுவரக் கூடிய சீக்கிரத்தில் ஆறி உலரும்.

வேறுவித பச்சைச் சேர்வை சீலை

கெவுரிபாஷாணம்	விராகனிடை	1 1/4
மிருதார்சிங்கி	,,	,,
மயில்த்துத்தம்	,,	2 1/2
அரிதாரம்	,,	,,

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நல்லெண்ணை விட்டு மைபோல் அரைத்து பின்பு சலம்விட்டுக் கழுவி வழித்தெடுத்து வைத்துக் கொண்டு உட்சதைவளர்ந்திருக்கும் ரணம் மார்பில் காணும்

பிளவை இவைகட்கு இந்த சேர்வையை சீலையிற்றடவி ரணத்தின் மேல் போட்டுக் கொண்டுவர உட்சதைகளைக் கரைக்கும் இரணத்தை யாற்றும்.

வேறுவித பச்சைச் சேர்வை சீலை

நிமிளை	விராகனிடை	1 1/4
பாதரசம்	,,	,,
பாஷாணம்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
அரிதாரம்	,,	,,
சுண்ணாம்பு	பலம்	1

இந்த ஆறு தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு ரெண்டுபலம் நல்லெண்ணெய் வார்த்து மைபோல் அரைத்து பின்பு சலம்விட்டுக் கழுவியெடுத்து வைத்துக்கொண்டு சூலை கிரந்தி பிளவை பவுத்திரம் இவைகளுக்கு இந்த சேர்வையை சீலையிற்றடவிப் போட்டுக் கொண்டுவர இரணங்கள் ஆறி கூடிய சீக்கிரத்தில் உலரும்.

அரையாப்பு கட்டிக்கு பத்து

சவுக்காரம் சித்தண்டை வெள்ளை இவை மூன்றும் சமனாகவெடுத்து நீர்விட்டு அரைத்துக் கட்டியின்மேல் பூசிக்கொண்டுவர கரையும், கரையாவிட்டால் அதின்மேல் புளியும் சேராங்கொட்டையும் சேர்த்து அடைதட்டி வைத்துக்கட்டி மூன்றாம்நாள் கட்டு அவிழ்க்கவும் இதுபோல புளியும் வெள்ளை பாஷாணமும் கால்பலம்சேர்த்து பில்லைகட்டி வைத்துக் கட்டலாகும்.

அரையாப்புக்கு களிம்பு

வெள்ளைப்பாஷாணம்	விராகனிடை	1 1/4
கெவுரிபாஷாணம்	,,	,,
பாதரசம்	,,	,,
அரிதாரம்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
குங்கிலியம்	பலம்	4

இந்த ஆறுதினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு ஒருபலம் நல்லெண்ணெய்விட்டு மைபோல் அரைத்து பின்பு சலம்விட்டுக் கழுவி யெடுத்து வைத்துக்கொண்டு கடிவிஷங்களுக்கும் சூலை அரையாப்புப் பிளவை பவுத்திரம் குஷ்டம் வெடி ஜன்னி இவைகளுக்கு சீலையிற்றடவி மேற்போட சகல விஷமும் நீங்கும் இரணம் ஆறும் கட்டியுடையும் ஏழுமுறை தண்ணீர்விட்டுக் கழுவவும்.

அரையாப்புக் கட்டிக்கு வேறுவித களிம்பு

குங்கிலியம்	பலம்	1/4
மயில்த்துத்தம்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
இலிங்கம்	,,	,,
கர்ப்பூரம்	,,	,,
விளாம்பிசினி	,,	,,

இந்த ஆறு தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு ரெண்டு பலம் நல்லெண்ணெய் விட்டு மைபோல் அரைத்து பின்பு முறையே ஏழுதரம் தண்ணீரில் கழுவி வழித்தெடுத்து வைத்துக் கொண்டு சிங்கி பிளவை பவுத்திரம் அரையாப்புக்கட்டி ஆறாவிரணம் இவைகட்கு சீலையில் தடவிமேல் போட்டுவரக் கட்டியுடையும் ரணம் ஆறும்.

அரையாப்புக் கட்டிக்கு வேறுவிதக் களிம்பு

பால்த்துத்தம்	பலம்	1/4
நிமிளை	,,	,,
மயில்த்துத்தம்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
அரிதாரம்	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு மூன்றுபலம் நல்லெண்ணெய் நெய் வெண்ணெய் இவைகளால் அரைத்து வழித்தெடுத்து வைத்துக் கொண்டு தண்ணீர் வடிகின்றசிங்கி கிரந்தி மூலம் பவுத்திரம் கடிவிஷங்கள் பிளவை துடைவாழை இவைகட்கு இந்தக் களிம்பைச் சீலையிற்றடவி மேலே போட்டுக் கொண்டுவர சர்வ விஷமும் நீங்கும் இரணம் ஆறும் கட்டியுடைந்து ஆறும்.

கிரந்திக்கும் யோனிப்புத்துக்கும் காரசீலை

நீலம்	பலம்	1/2
அரிதாரம்	,,	,,

இவ்விரண்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு இரண்டுபலம் நல்லெண்ணெய் விட்டு அரைத்து பின்பு தண்ணீர் விட்டரைத்துக் கழுவி யெடுத்துவைத்துக் கொண்டு இரணம் உதிரக்கிரந்தி உள்வீக்கம் நாய்முள்ளு அரிகிரந்தி ஆறாதப்புண்கள் பவுத்திரம் இவைகட்கு சீலையிற்துவட்டி இரணங்களின்மேல் போட்டுக் கொண்டு வரவும்.

வேறுவிதக் காரசீலை

மயில்த்துத்தம்	விராகனிடை	1/4
அரிதாரம்	,,	,,
இலிங்கம்	,,	,,
கெந்தகம்	,,	,,
பாதரசம்	,,	,,
வெங்காரம்	,,	,,
வெள்ளெருக்கம்பூச்சாறு	பலம்	1

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு ஊமத்தன்காய்ச்சார் விட்டு அரைத்து சீலையில் ஏற்றி உலர்த்தி வைத்துக் கொண்டு ஆறாதவிரணம் சூலை வெடிப்பு கிரந்தி குஷ்டம் இரத்தக்கிரந்தி பவுத்திரம் இவைகட்கு இந்தச் சீலையை மேலேபோட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் இரணங்களாறும்.

சகல ரணங்களுக்குந்தையிலம்

பாதரசம்	பலம்	1/4
காந்தபாஷாணம்	,,	,,
கெந்தகம்	,,	,,
அரிதாரம்	,,	,,
லிங்கம்	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு பருத்திப்பாலும் நல்லெண்ணெயும் விட்டு மைபோலரைத்து வழித்தெடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு ஆறாதவிரணம் ரத்தங்கட்டிக் கொண்டிருக்குஞ் சதைகள் பிளவை பவுத்திரம் குஷ்டம் இவைகட்கு இத்தைலத்தை சீலையிற்றடவி மேலே போட்டுக் கொண்டுவர சகலரணங்களும் ஆறும் முளை ஆணி இவைகள் வெளியாகும்.

சகலரணங்களுக்கும் உள்ளுக்குக் கொள்ளுந் தயிலம்

நாபி	விராகனிடை	1 1/4
பாதரசம்	,,	,,
கெந்தகம்	,,	,,
வெள்ளைப்பாஷாணம்	,,	,,
அரிதாரம்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
வெண்காரம்	,,	,,
கஞ்சா	,,	,,
நிமிளை	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
மயில்த்துத்தம்	,,	,,
லிங்கம்	,,	,,
மனோசிலை	,,	,,
கெவுரிபாஷாணம்	,,	,,
தாளகம்	,,	,,
ஜாதிலிங்கம்	,,	,,
இந்துப்பு	,,	,,

இந்தப் பதினேழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து சுத்திசெய்து கல்வத்திலிட்டு எறுக்கன் பால்வார்த்து ஒருநாள் முழுவதும் அரைத்து பின்பு சதுரக்கள்ளியின் பாலினால் இரண்டுநாள் ஆறுஜாமம் அரைத்து சீலையில் ஊட்டித் திரிசெய்து நிழலுலர்த்தி வேப்பெண்ணையில் தோய்த்து விளக்கில் பத்தவைக்க அதில் தயிலம் சொரியும். அதைக் குப்பியில் பிடித்து அடக்கஞ் செய்து வைத்துக்கொண்டு காலையில் பணவிடை வீதம் பனிரெண்டு நாள் உள்ளுக்குக் கொடுத்து வர சகல இரணங்களும் ஆறி உலரும் இரணங் களின் மீதும் பூசிக்கொண்டு வர வேண்டும்.

வேறு வித வெள்ளை காரச்சீலை

வெள்ளைப்பாஷாணம்	பலம்	1
கெவுரிபாஷாணம்	,,	,,
குங்கிலியம்	,,	,,
வெள்ளைச் சவடு	,,	,,

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமம் வெள்ளைத் துணிசேர்த்து இடித்துப் பொடி செய்து ரணங்களின் மீதுப் போட்டுக் கட்ட சகல ரணங்களும் ஆறும்.

முளைவிழக் கருப்பு காரசீலை

கெவுரி பாஷாணம்	பலம்	1/2
அரிதாரம்	,,	,,
சுண்ணம்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
வெள்ளைப்பாஷாணம்	,,	,,
குங்கிலியம்	,,	,,

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து இதற்குச் சமனாக மஞ்சள் பொடி சேர்த்துச் சீலையில் வைத்து முளையின் மீது வைத்துக் கட்ட முளையானது அற்றுவிழும் உபாதை தீரும்.

வேறுவிதக் காரசீலை

வெள்ளைப்பாஷாணம்	விராகனிடை	1 1/4
அரிதாரம்	,,	,,
கெவுரிபாஷாணம்	,,	,,
மஞ்சள்	,,	,,
மிருதாருசிங்கி	,,	,,
நீலம்	,,	5
பச்சைக்குங்குலியம்	,,	1

இவைகளை நிறுத்தெடுத்து அதற்குச்சமன் பழந்துணியைச் சேர்த்துயிடித்துப் பொடித்தும் எவ்விதமான விரணங்களுக்கும் ஆறாதப் புண்களுக்கும் மேலே போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறிவுலர்ந்துவிடும்.

வேறுவிதப் பொன் சிகப்புக் காரசீலை

லிங்கம்	பலம்	1
காவிச்சீலை	,,	,,
மஞ்சள்	,,	,,
வெள்ளைப்பாஷாணம்	,,	,,
சங்கு	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனாக சீலை சேர்த்து இடித்துப் பொடித்து முளைகள்மீது வைத்துக்கட்ட முளையானது வெளி வந்து விடும் பொன் சிகப்பு நிறமுள்ள இரெணங்கள் ஆறும் ஆனால் பழைய துணிகந்தையைச் சேர்க்க வேண்டும்.

மஞ்சள் வர்ண பிளவைக்குப் பொன்சிகப்புக் காரசீலை

மஞ்சள்	பலம்	1/4
வசம்பு	,,	,,
நீலம்	,,	,,
வெள்ளைப்பாஷாணம்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
தலைமண்டைஓடு	,,	,,

இவைகளை நிறுத்தெடுத்து இடித்துப் பொடித்து அதற்குச் சமன் பழந்துணியைச் சேர்த்து இடித்து மஞ்சள் வர்ணம் பிளவை ரோக விரணங்களுக்கு இந்தக் காரச்சீலையை போட்டுக் கொண்டுவர இரணங்கள் ஆறும் ஆனால் மஞ்சள் வசம்பு இவை ரெண்டையும் சுட்டுக் கரியாக்கி மேற்கண்ட இடைகள் போல சேர்க்க வேண்டியது.

மூலத்திற்குக் குளிர்ந்த பச்சைக் காரசீலை

மிருதார்சிங்கி	பலம்	1/4
கெவுரி பாஷாணம்	,,	,,

அரிதாரம்	பலம்	1/4
வெள்ளைப் பாஷாணம்	,,	,,
மயில்த்துத்தம்	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமன் துணிசேர்த்து நொருங்கவிடித்துப் பொடியாக்கி பவுத்திரம் மூலம் குஷ்டம் இவைகளுக்கு மேல் போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறும்.

வேறுவித வெள்ளைக் காரம்

தலைமண்டைஓடு	பலம்	1/4
சங்கு	,,	,,
வெள்ளைப் பாஷாணம்	,,	,,

இந்த மூன்று தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனாக துணிகூட்டி பொடியாக இடித்து எடுத்துப் பொருக்க முடியாத யெரிவந்தத்தோடு நீர்வடியும் புண்பிளவை பவுத்திரம் பரங்கி எரிசூலை இவைகளுக்குமேல் போட்டு உபயோகப்படுத்திக் கொண்டுவர மேற்கூறிய விரணமுதலானதும் ஆறி உலரும்.

வேறுவித பச்சைக் காரம்

மிருதார்சிங்கி	பலம்	1/4
சங்கு	,,	,,
மஞ்சள்	,,	,,
கருங்குங்கிலியம்	,,	,,

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனாக வெள்ளைத் துணிசேர்த்து இடித்துப் பொடித்து பரங்கிப் புத்து பிளவை பவுத்திரம் ஆறாத விரணங்கள் இவைகளுக்கு மேலே போட்டு உபயோகித்துவர குளிர்ச்சியாக விருக்கும் மேற்கூறிய விரணங்கள் ஆறி உலரும்.

இரணங்களுக்கு மஞ்சட் காரம்

மயில்த்துத்தம்	பலம்	1/4
கருங்குவளை	,,	,,
மஞ்சள்	,,	,,

சங்கு	பலம்	1/4
தலைமண்டைஓடு	,,	,,
சுண்ணம்	,,	,,
குங்கிலியம்	,,	,,
காவிச்சீலை	,,	,,

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனாக துணிசேர்த்து இடித்துப் பொடித்து எறிசிங்கி பிளவை சிங்கி பவுத்திரம் இவைகளின்மேல் போட்டுக் கொண்டு வர குளிர்ந்து விரணங்கள் ஆறி உலரும்.

வேறுவித நீலக் காரம்

பால்த்துத்தம்	பலம்	1/4
சங்கு	,,	,,
மயில்த்துத்தம்	,,	,,
வெள்ளைப் பாஷாணம்	,,	,,
நீலம்	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனாக வெள்ளை துணிசேர்த்து இடித்துப் பொடித்து எரிச்சலுடைய இரணத்தின் மேல் போட்டுக்கொண்டு வர யெரிசிங்கி ரெணமானது ஆறி உலரும்.

வேறுவித மஞ்சட் காரம்

மஞ்சள்	பலம்	1/4
சங்கு	,,	,,
தலைமண்டைஓடு	,,	,,
அரிதாரம்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
கருங்குங்கிலியம்	,,	,,

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனாக துணிசேர்த்து இடித்துப் பொடித்து வெரிசிங்கி பறங்கி இவ்வித ரெணங்களுக்கு மேல் போட்டுக் கொண்டு வர இரணமாறி உலரும்.

ரத்தசிங்கிக்குக் கருத்தக் காரம்

மஞ்சள்சுட்டகரி	பலம்	1/4
வசம்புசுட்டகரி	,,	,,
சங்கு	,,	,,
தலைமண்டைஓடு	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
வெள்ளைப் பாஷாணம்	,,	,,
துணிக்கந்தை	,,	,,

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து பஞ்சுபோல் இடித்து பவுத்திரம் பிளவை ரத்தசிங்கி மூலம் மூளைநோய் இவைகளுக்கு மேலே வைத்துக்கட்ட இரெணங்களாறும் முளை விழுகும்.

கட்டிக்கு வெண்காரப் பொடி

கெவுரிபாஷாணம்	பலம்	1/4
அரிதாரம்	,,	,,
வீரம்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
வெண்காரம்	,,	,,
சவுடு	,,	,,
சுண்ணம்	,,	,,
நீலம்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
குங்கிலியம்	,,	,,
துணிக்கந்தை	,,	,,

இந்த பதினோறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து பஞ்சுபோல் யிடித்து வைத்துக்கொண்டு குஷ்டம் பதினெட்டுக்கும் திமிர்களுக்கும் பாம்புகடி, எலிகடி, தேள்கடி, நாய்கடி, நரிகடி கட்டிகள் சதை வளர்ந்த ரணம் குதிகள்ளாம் பறங்கி இவைகளுக்கு மேல் போட்டுக்கட்டிக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் இரணமாறி யுலரும்.

பச்சைக் காரநீலை

மஞ்சள்	பலம்	1/2
கெவுரி பாஷாணம்	,,	,,

அரிதாரம்	பலம்	1/2
வெள்ளி	,,	,,
மிருதாருசிங்கி	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனாக நீலம் சேர்த்து கல்வத்திலிட்டுக் கள் வார்த்து அரைத்து மெல்லிசாகிய சீலையில் ஊட்டி திமிர் தொடை வாழை இவைகளுக்கு மேல் போட்டுக் கொண்டுவர சொஸ்த்தமாகும்.

பச்சைக் கார சீலை

சகலவித சிரங்குகளுக்கும் கருத்தகாரச்சீலை

மஞ்சள் சுட்டகரி	பலம்	1/2
வசம்பு சுட்டகரி	,,	,,
எருக்கிலை சுட்டகரி	,,	,,
மயில்த்துத்தம்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
கெவுரி பாஷாணம்	,,	,,
வெள்ளைப் பாஷாணம்	,,	,,
சங்கு	,,	,,

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு முலைப்பாலும் கையாந்தகரைச் சாறும் விட்டு மைபோல் அரைத்து வைத்துக் கொண்டு கடிவிஷங்களா லுண்டாகும் இரணம், ஆறாதபுண் திமிர் தினவு சகலவிதமான சிரங்கு சொறிசிரங்கு இவைகட்குச் சீலையில் தடவி மேல்போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறி உலரும்.

பஞ்சட் காரசீலை

பாதரசம்	விராகனிடை	1 1/4
கெவுரி பாஷாணம்	,,	,,
வீரம்	,,	,,
அரிதாரம்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
கடுக்காய்	,,	,,
கர்க்கடகசிங்கி	,,	,,

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு கோழி முட்டையைக் கொண்டுவந்து சிகப்பு அம்பிலியைப் போக்கி வெள்ளை அம்பிலிவிட்டு மைபோல் அரைத்துச் சீலையிலூட்டி இரண முதலான கட்டிகள் மீது போட்டுக் கொண்டுவர இரணமாறும்.

நொணாக்காய் பருவுக்கு சிகப்புக் காரச்சீலை

பாதரசம்	பலம்	1/4
லிங்கம்	,,	,,
அரிதாரம்	,,	,,
கெவுரி பாஷாணம்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
காவிமண்	,,	,,

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு யெலுமிச்சம் பழச்சாறும் முலைப்பாலும் விட்டு மைபோலரைத்து வைத்துக் கொண்டு நொணாக்காப்புண் ஆறாத விரணம் பிளவை தொடைப் புழுவினாலுண்டாகிய பவுத்திரம் ஏழுடன் ஆனைக்கால் விரணம் இவை முதலானதற்கும் சீலையிற்றடவி இரணங்களின் மீது போட்டுக் கொண்டு வர ஆறி உலரும்.

வாய்புத்திற்கு வெள்ளைக் காரசீலை

சங்கு	பலம்	1/4
பாதரசம்	,,	,,
குங்கிலியம்	,,	,,
வெள்ளைத் துணி	,,	,,
சவுடு	,,	,,
சுண்ணாம்பு	,,	,,

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு முலைப்பால்விட்டு மைபோல் அரைத்து வழித்து வைத்துக்கொண்டு வாய்ப் புத்து பிளவை யிவைகளுக்குச் சீலையில் தடவி மேல்போட்டுக் கொண்டு வர இரணமானது ஆறும் வாய்புத்துத் தீரும். மற்றய விரணங்களுக்கும் உபயோகப்படுத்தலாம்.

சகலவிரணங்களுக்கும் நீலக் காரசீலை

வெந்ததலைமண்டை ஒடு	பலம்	1/2
சங்கு	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
வீரம்	,,	,,
வெள்ளைப் பாஷாணம்	,,	,,
அரிதாரம்	,,	,,
சவுட்டுமண்	,,	,,
நீலம்	,,	,,

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு அரைத்து பழைய துணியில் தடவி இரணங்களின் மீதுப் போட்டுக் கொண்டு வர இரணங்கள் ஆறும் உபாதை தீரும்.

புரைச்சதை யுண்ணுந்திரி

மயில்த்துத்தம்	பலம்	1/4
பால்த்துத்தம்	,,	,,
பாதரசம்	,,	,,
அரிதாரம்	,,	,,
நீலம்	,,	,,
கெந்தகம்	,,	,,

இந்த ஆறு தினுசுகளையும் பச்சை வெட்டாக நிறுத்தெடுத்துக் கல்வத்தி லிட்டு இளநீர் விட்டு மைபோல் அரைத்து சீலையில் ஊட்டி சதையை தின்றுக் கொண்டுபோகும் புரையில் இந்த சீலையை திரி செய்து புரைக்குள் யேற்றிக்கொண்டுவர சதையைக் கரைத்துப் புரைரணத்தைக் கூடிய சீக்கிரத்தில் ஆற்றி உலர்த்தி விடும்.

முடுகும் பச்சைதண்ணீர்

மிருதார்சிங்கி	பலம்	1/2
கர்க்கடகபாஷாணம்	,,	,,
நிமிளை	,,	,,
காந்தக்கல்	,,	,,

அரிதாரம்	பலம்	1/2
லிங்கம்	,,	,,
செந்தூரம்	,,	,,
கெந்தி	,,	,,
வெள்ளைப் பாஷாணம்	,,	,,

இந்த ஒன்பது தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்துச் சுன்னமாகப் பொடித்து வைத்துக் கொண்டு இரணங்களின் மீது போட்டுக் கொண்டு வர சகல இரணங்களும் ஆறி உலரும்.

சிகப்புத் தண்ணீர்

லிங்கம்	பலம்	1/4
செந்தூரம்	,,	,,
நீலம்	,,	,,
குங்கிலியம்	,,	,,
காவிமண்	,,	,,
சீலை	,,	,,
வெள்ளைப்பாஷாணம்	,,	,,

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் கொடிப்பாலைச் சார்விட்டு மைபோலரைத்து வழித்து பெரியக்குப்பி யிலடக்கிக் கொண்டுப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு சீலையில் தோய்த்து திரிசெய்து புரைரெணங்களுக்கு உள் ஊட்ட ஆறாத விரணங்கள் ஆறும் யெரிச்சலடங்கும் பவுத்திரம் பிளவை தொடைவாழைப்பருவு யிவைகளுக்கும் மேல்போட்டு உபயோகப்படுத்திக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் சொஸ்த்தமாகும்.

முடுகுபச்சைத் தண்ணீர்

மிருதார்சிங்கி	பலம்	1/4
மயில்த்துத்தம்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
கெவுரிபாஷாணம்	,,	,,
பரங்கிப்பட்டை	,,	,,
அரிதாரம்	,,	,,

மஞ்சள்	பலம்	1/4
வெள்ளைப்பாஷாணம்	,,	,,
நீலம்	,,	,,

இந்த ஒன்பது தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு இரெண்டுபடி முந்திரிநீர் விட்டு அரைத்துக் குப்பியிலடக்கஞ் செய்துவைத்துக் கொண்டு முளை மூலம் குதிகள்ளான் நுணாப்பருவு குஷ்டம் பிளவை பவுத்திரம் இவைகளுக்கு யிந்த தண்ணீரை சீலையில் நனைத்து மேலே போட்டுக் கொண்டுவர இரணங்களாறும் முளைகளாறும் உபாதை தீரும்.

பிளவை கட்டிக்குக் குங்குமத் தண்ணீர்

சவுட்டுமண்	பலம்	1/2
கெவுரிபாஷாணம்	,,	,,
அரிதாரம்	,,	,,
மஞ்சள்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
வெள்ளைப் பாஷாணம்	,,	,,
கர்ப்பூரம்	,,	,,
குங்கிலியம்	,,	,,

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு முந்திரி நீர் வார்த்து அடைத்து குப்பியிலடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு பிளவை கட்டி இவைகளுக்குச் சீலையில் தடவி போட்டுக் கொண்டுவர கட்டி உடையும் பிளவை யிரணங்களையும் ஆற்றும்.

வேறுநீலக் காரத் தண்ணீர்

கரந்தை	பலம்	1 1/4
பாதரசம்	,,	,,
கெவுரிபாஷாணம்	,,	,,
வெள்ளைப் பாஷாணம்	,,	,,
சந்தனம்	,,	,,
பரங்கிப்பட்டை	,,	,,
சவுட்டுமண்	,,	,,

சுண்ணாம்பு	பலம்	1 1/4
நீலம்	,,	1

இந்த ஒன்பது தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு முந்திரி நீர் வார்த்து மைபோலரைத்து குப்பியிலடைத்து வைத்துக் கொண்டு சகல விரணங்களுக்கும் சீலையில் நனைத்து மேலுக்குப் போட்டுக்கொண்டு வர விரணத்தை ஆற்றிவிடும்.

வேறுவித கடுங்கார வெள்ளை நீர்

சுட்டதலைமண்டை ஒடு	பலம்	1/4
சுண்ணாம்பு	,,	,,
பரங்கிப்பட்டை	,,	,,
வெள்ளைப்பாஷாணம்	,,	,,
நவாச்சாரம்	,,	,,
படிகாரம்	,,	,,
வெங்காரம்	,,	,,
சங்கு	,,	,,

இந்த எட்டு தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு அதற்குச்சமன் முந்திரி நீர் விட்டு மைபோல் அரைத்து வழித்துக்குப்பியில் அடக்கஞ்செய்து வைத்துக்கொண்டு சகல விரணங்களுக்கும் பிளவை முதலானக் கட்டிகளுக்கும் சீலையிலேற்றி மேல் போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறி யுலரும்.

கிரந்திக்குப் பச்சை நீர்

நீலம்	பலம்	3/4
கெவுரி பாஷாணம்	,,	,,
அரிதாரம்	,,	,,
மஞ்சள்	,,	,,
குங்கிலியம்	,,	,,
மயில்த்துத்தம்	,,	,,

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு கள் வார்த்து அரைத்து வழித்து அடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு கிரந்தி

முதலாகிய விரணங்களுக்கு இதைச் சீலையில் நனைத்து விரணங்களின் மீது போட்டுக்கொண்டு வர கூடிய சீக்கிரத்தில் ஆறி உலரும்.

எரி ரணத்திற்கு குளிர்ந்த நீர்

பாதரசம்	பலம்	1/8
சங்கு	,,	,,
காவிக்கல்	,,	,,
லிங்கம்	,,	,,
மயில்த்துத்தம்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
கடுக்காய்	,,	,,

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு கள் வார்த்து மைபோல் அரைத்துக் குப்பியிலடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு எரிரணங்களின் மீது பூசிக்கொண்டு வர விரணமாறும் குளிர்ச்சியாக விருக்கும்.

எரிரணத்திற்கு குளிர்ந்த நீலநீர்

பாதரசம்	பலம்	1 1/4
கெந்தி	,,	,,
தலைமண்டை ஓடு	,,	,,
காவிக்கல்	,,	,,
லிங்கம்	,,	,,
நீலம்	,,	,,

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு காலைக் கள் வார்த்து மைபோல் அரைத்து வழித்துக் குப்பியில் அடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு எரிச்சலுள்ள விரணங்களின் மீது போட்டுக் கொண்டுவர குளிர்ச்சியாக விருக்கும் இரெணம் ஆறும்.

வேறுமுறை குளிர்ந்த நீலநீர்

சங்கு	பலம்	1/4
படிகாரம்	,,	,,
வெண்காரம்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,

சாம்பிராணி	பலம்	1/4
வெந்ததலைமண்டை ஓடு	,,	,,
வெள்ளைக்குங்கிலியம்	,,	,,

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் கள் வார்த்து மைபோல் அரைத்து வழித்துக் குப்பியில் அடக்கஞ் செய்து வைத்துக்கொண்டு எரிச்சலுடைய இரணங்களின் மீது போட்டுக் கொண்டு வரக் குளிர்ச்சியாக விருக்கும் சகலமான விரணங்களையும் ஆற்றிவிடும்.

எரிரணத்திற்கு குளிர்ந்த குங்குமத் தண்ணீர்

கஸ்தூரிமஞ்சள்	பலம்	1/4
மிருதார்சிங்கி	,,	,,
கர்க்கடகச்சிங்கி	,,	,,
கடுக்காய்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டுகள் வார்த்து மைபோல் அரைத்து வழித்து குப்பியில் அடக்கஞ்செய்து வைத்துக்கொண்டு சீலையில் நனைத்து எரிகின்ற விரணத்தின் மீது போட்டுக் கொண்டு வர குளிர்ச்சியாகவிருக்கும் இரணம் ஆறியுலரும்.

எரி ரணத்திற்கு கறுத்த குளிர்ந்த நீர்

மஞ்சள்சுட்டகரி	பலம்	1/2
வசம்புசுட்டகரி	,,	,,
பாதரசம்	,,	,,
கெந்தகம்	,,	,,
நீலம்	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு கள் வார்த்து மைபோல் அரைத்து குப்பியிலடைத்து வைத்துக்கொண்டு எரிச்சலுடைய எவ்வித விரணங்களுக்கும் இந்த நீரைச் சீலையில் நனைத்து மேலே போட்டுக் கொண்டுவர குளிர்ச்சியாக விருக்கும் சகல ரெணங்களும் ஆறியுலரும்.

சர்வ ரணங்களுக்கும் சிங்கித் தயிலம்

மிருதார்சிங்கி	பலம்	1/2
கெந்தகம்	,,	,,
நீலம்	,,	,,
பாதரசம்	,,	,,
படிகாரம்	,,	,,
பரங்கிப்பட்டை	,,	,,
கடுக்காய்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
வசம்பு	,,	,,
வெங்காயம்	,,	,,

இந்த பத்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து பொடித்து ஒரு பாண்டத்திலிட்டு அதில் அரைப்படி புங்கம்பாலும் அரைப்படி ஒதியன் பாலும் அரைப்படி தேங்காய் நெய்யும் வார்த்துக் கடுகுபதமாகக் காய்ச்சி இறக்கி வைத்துக்கொண்டு அரிபிளவை புரை கிரந்தி பரங்கி தொடைவாழை எரிகின்ற சூலை ரணம் வெடிரணம் பவுத்திரம் இவைகளுக்கு மேலுக்கு உபயோகப்படுத்த ஆறியுலரும்.

வேறுவித சிங்கித் தயிலம்

கஸ்தூரிமஞ்சள்	விராகனிடை	1 1/4
நிமிளை	,,	,,
காந்தக்கல்	,,	,,
பாதரசம்	,,	,,
அரிதாரம்	,,	,,
குங்கிலியம்	,,	,,
வெள்ளைப் பாஷாணம்	,,	,,
வசம்பு	,,	,,
வெங்காயம்	,,	,,

இந்த ஒன்பது தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்து பொடித்து ஓர் பாண்டத்திலிட்டு புங்கம்பால் படி ஒதியன்பால் அரை படி நல்லெண்ணை அரை படி ஒன்று அதில் வார்த்து யெண்ணைப் பதத்தில் காய்ச்சி யிறக்கி வைத்துக் கொண்டு சிங்கி பிளவை ரணம் புத்து அரையாப்பு

பவுத்திரம் சூலை இவைகளுக்கு சீலையில் இந்தத் தயிலத்தை தோய்த்து மேலே போட்டுக் கொண்டுவர ஆறியுலரும்.

வேறுமுறை பங்காளப்பச்சை தயிலம்

பாதரசம்	விராகனிடை	1 1/4
கெந்தகம்	,,	,,
அரிதாரம்	,,	,,
மயில்த்துத்தம்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
குங்கிலியம்	,,	,,
அபினி	,,	,,
காசுக்கட்டி	,,	,,
படிகாரம்	,,	,,
வெள்ளைபாஷாணம்	,,	,,
வெங்காயம்	,,	,,
கஸ்தூரிமஞ்சள்	,,	,,
வசம்பு	,,	,,

இந்த பதிநாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துப் பொடி:துது ஒரு பாண்டத்திலிட்டு அதில் நல்லெண்ணை தேங்காய்ப்பால் புங்கன்பால் ஒதியன் பால் வகைக்குப்படியாக வார்த்து அடுப்பேற்றி தயிலபதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு புண் புரை இரணம் பவுத்திரம் ஆறாத சகல விதமான விரணங்கள் மீது இந்தத் தயிலத்தைச் சீலையில் நனைத்துமேலே போட்டுக்கொண்டுவர சகலவிரணங்களும் ஆறியுலரும்.

சகலரணங்களுக்கும் மேல்பூசும் மருந்து

அரைப்பலம் பங்காளப் பச்சையை மைனம் போல் பொடி செய்து ஏழுரைப்பலம் நெய்யாவது அல்லது வெண்ணையிலாவது நன்றாயரைத்து நெடுநாளாய் ஆறாம லிருக்கும் புண்களுக்கு மேல் போட்டுக்கொண்டு வர ஆறியுலரும் மேகத்தைச்சார்ந்த கெட்ட தொண்டைப் புண்களுக்கு ஒரு யிறகின் நுணியால் தொட்டு தடவிக்கொண்டுவர ஆறியுலரும் மேற்படிப் புண்களுக்கு நெய் அல்லது வெண்ணையைப் பார்க்கிலும் தேன் நன்று ஒன்றிலுந்தீராத படர் தாமரைக்கு நாளொன்றுக்கு இரெண்டுதரம் மேற்படி குழம்பை மேலுக்கு நன்றாய் தேய்க்கில் படர் தாமரை அகன்று வாசியாகும் வுள்ளுக்கு உபயோகிக்கக் கூடாது.

வேறுவித பச்சைத் தயிலம்

மரமஞ்சள்	விராகனிடை	1 1/4
கர்க்கடகசிங்கி	,,	,,
வெங்காயம்	,,	,,
கடுக்காய்	,,	,,
குண்டுமணிவிதை	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
மயில்த்துத்தம்	,,	,,
பாதரசம்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
நீலம்	,,	,,
அரிதாரம்	,,	,,
வசம்பு	,,	,,
கொருக்காபுளி	,,	,,

இந்த பதிமூன்று தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்து யெடுத்து பொடித்து வைத்துக்கொண்டு ஒருமண் பாண்டத்தில் ஒருபடி நல்லெண்ணெயும் கால்படி முலைப்பாலும் கால்படி குமரிச்சாறும் விட்டு அதில் பொடித்த தூளைப்போட்டு யெரித்துக்காச்சி தயிலப்பதத்தில் யிறக்கி வடித்து வைத்துக் கொண்டு ஆராத விரணம் தண்ணீர் வடிகின்ற விரணம் பிளவை புத்து பவுத்திரம் இவைகட்கு சீலையில் நனைத்து மேலுக்குப் போட்டுக் கொண்டு வர சகலவிதமான விரணங்களும் ஆறியுலரும்.

புண்கள் புரைகள் மாறத்தயிலம்

குங்கிலியம்	விராகனிடை	1 1/4
சாம்பிராணி	,,	,,
பாதரசம்	,,	,,
கெந்தகம்	,,	,,
மயில்த்துத்தம்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
நீலம்	பலம்	1

இந்த ஏழு தினுசுகளையும் பொடித்து வைத்துக்கொண்டு ஒரு மண் பாண்டத்தில்

தும்பைச்சாறு	படி	1
முருங்கையிலைசாறு	,,	,,
துளசியிலைசாறு	,,	,,
புங்கனிலைசாறு	,,	,,
நுனாயிலைசாறு	,,	,,
கையாந்தகரைசாறு	,,	,,
குமரிச்சாறு	,,	,,
வில்வயிலைச்சாறு	,,	,,
நல்லெண்ணெய்	,,	,,
புங்கம்பால்	,,	1/4

இவைகளை விட்டு அதில் பொடித்தூள்களைப் போட்டு எரித்து தயிலப்பதமாக யிறக்கி வடித்து வைத்துக்கொண்டு சூலை புரை பிளவை தாள்புத்து பவுத்திரம் இன்னம் பலவிதமான விரணங்களுக்கும் இந்த தயிலத்தைச் சீலையில் துவட்டிமேல் போட்டுக் கொண்டு வர விரணங்கள் ஆறி யுலரும் புரைகள் மாறும்.

புரைகள் மாறக் குங்குமத்தயிலம்

மஞ்சள்	விராகனிடை	1 1/4
வசம்பு	,,	,,
அரிதாரம்	,,	,,
பாதரசம்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
படிகாரம்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
கர்க்கடகசிங்கி	,,	,,
வெங்காயம்	,,	,,
கல்நார்	,,	,,
அபினி	,,	,,

இந்தப் பதினோறு தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்து பொடித்து வைத்துக்கொண்டு ஒரு மண்பாத்திரத்தில் நல்லெண்ணெய் படிவிட்டு அத்துடன் முலைப்பால் படிவிட்டு பொடித்துவைத்த சரக்குகளை அதில்போட்டு யெரித்துக்காய்ச்சி யிறக்கி வடித்துவைத்துக் கொண்டு ஆறாத விரணங்கள் பிளவை புரை புண் இவைகட்கு இந்தத் தயிலத்தை சீலையில் நனைத்துப் போட்டுக்கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறியுலரும்.

சகலவிரணங்களின் புரை மற்றும் குமரித் தயிலம்

நொச்சியிலைச்சாறு	பலம்	1/8
அழிஞ்சியிலைச்சாறு	,,	,,
நுணாயிலைச்சாறு	,,	,,
முருங்கயிலைச்சாறு	,,	,,
அவுரியிலைச்சாறு	,,	,,
சங்கனிலைச்சாறு	,,	,,
கையாந்தகரைச்சாறு	,,	,,
துளசிச்சாறு	,,	,,
தும்பயிலைச்சாறு	,,	,,
குப்பமேனிச்சாறு	,,	,,
நல்லெண்ணெய்	,,	1
குமரிச்சாறு	,,	,,

இந்த சாறுயெண்ணெய்களை வொன்றாய்க்கலந்து ஒரு பாண்டத்தில் விட்டு அதில்

பாதரசம்	விராகனிடை	1 1/4
கெந்தகம்	,,	,,
சித்திரமூலம்	,,	,,
வாலுழுவை	,,	,,
பால்த்துத்தம்	,,	,,

இவைகளைப் பொடித்து சாறுயெண்ணையுடன் சேர்த்து யெரித்து தயிலப் பதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு சகல விரணங்களுக்கும் சீலையில் நனைத்து மேல்போட்டுக் கொண்டு வர ஆறியுலரும் புரைகள் மாறும்.

சர்வ ரணங்களுக்கும் வேறுமுறைத் தயிலம்

சங்கனிலைச்சாறு	படி	1/8
துளசியிலைச்சாறு	,,	,,
நாயுருவிச்சாறு	,,	,,
சாரணைச்சாறு	,,	,,
கொன்றைச்சாறு	,,	,,

கொடிவேலிச்சாறு	படி	1/8
புங்கன்பால்	,,	,,
நுணாயிலைச்சாறு	,,	,,
அவுரியிலைச்சாறு	,,	,,
கையாந்தகரைச்சாறு	,,	,,
துத்தியிலைச்சாறு	,,	,,
தேங்காய் நெய்	,,	1
முலைப்பால்	,,	1/2

இந்தச்சாறு தேங்காய் நெய் முலைப்பால் இவைகளை ஒரு மண் பாண்டத்தில் வார்த்து அதில்

மயில்த்துத்தம்	பலம்	1/8
கெந்தி	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
பாதரசம்	,,	,,
அரிதாரம்	,,	,,
மரமஞ்சள்	,,	,,

இந்த ஆறுதினுசுகளையும் பொடித்துப் போட்டு எரித்துக் காய்ச்சித் தயில பதமாக யிறக்கி வடித்து வைத்துக் கொண்டு ஆறாதவிரணம் பிளவை சிங்கி தொடைவாழை பவுத்திரம் இவைகள் முதலானதற்கும் இந்தத் தயிலத்தைச் சீலையில் தோய்த்து இரணங்களின் மீது போட்டுக்கொண்டு வர கூடிய சீக்கிரத்தில் விரணங்கள் ஆறிவுலரும் புரைகளானது மாறும்.

சர்வரிணங்களுக்கும் மேற்பூசும் மருந்து

முருங்கையிலைச்சாறு	படி	1/8
மின்னையிலைச்சாறு	,,	,,
தும்பயிலைச்சாறு	,,	,,
அவிரியிலைச்சாறு	,,	,,
அத்திப்பால்	,,	,,
வேம்பின்சாறு	,,	,,
செருப்படைச்சாறு	,,	,,
பேயத்திச்சாறு	,,	,,
கொடிவேலிச்சாறு	,,	,,

கருநொச்சிலைச்சாறு	படி	1/8
கையாந்தகரைச்சாறு	,,	,,

இவைகளைக் கலந்து யெவ்வித விரணங்களுக்கும் மேல்பூச்சு பூசிக் கொண்டுவர ஆறியுலரும்.

சர்வ வீக்கத்திற்கும் பற்று

அபீன்	காசியிடை	1/2
கடுகு	பலம்	,,
பெருங்காயம்	,,	,,
நேர்வாளம்	,,	,,
கரும்பவளம்	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு எருக்கன் சார் விடுத்து மைபோல் அரைத்து வீக்கத்தின் மீதுப்பூசிக் கொண்டு வர பிளவை கட்டி சூலை பவுத்திரம் இவைகளின் வீக்கம் வாங்கி நோய் தீரும்.

அரையாப்புக் கட்டிக்கு வேறுமுறை பற்று

பவழம்	பலம்	1/2
கருஞ்சீரகம்	,,	,,
அபினி	,,	,,
பெருங்காயம்		
நாபி		
வெள்ளைப்பூண்டு		
சித்திரமூலம்		

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டுக் கள்ளிச் சாறு விடுத்து மைபோல் அரைத்து அரையாப்பு பிளவை பவுத்திரம் இன்னும் பலவிதமான வீக்கங்களுக்கும் மேலே பூசிக் கொண்டுவர வீக்கமானது வாடும் கட்டியானது கரைந்து போகும்.

சர்வ வீக்கத்திற்கும் கொடும் பற்று

பாதரசம்	பலம்	1/2
கெந்தகம்	,,	,,

வெங்காயம்	பலம்	1/2
நேர்வாளம்	,,	,,
பெருங்காயம்	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் கல்வத்திலிட்டுத் திருகுகள்ளிச்சாறு விட்டு மைபோல் அரைத்து கட்டிகள் சூலை வாதக்கட்டிகள் மேல்வீக்கம் பிளவை பவுத்திரம் இவைகட்கு மேல்பூசிக் கொண்டு வர வீக்கங்கள் வாடும் கட்டிகள் கரையும்.

வேறுமுறை வீக்கங்களுக்குப் பற்று

பாதரசம்	பலம்	1/4
கெந்தகம்	,,	,,
பெருங்காயம்	,,	,,
நேர்வாளம்	,,	,,
கரும்பவளம்	,,	,,
அபினி	,,	,,
கருஞ்சீரகம்	,,	,,

இவைகளை நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு பொற்றலைக்கரிப்பான் சாறுவிட்டு மைபோல் அரைத்து கட்டிகள் சூலை பிளவை வீக்கம் இவைகட்கு மேல் பூசிக்கொண்டு வர வீக்கங்கள் வாடும் கட்டிகள் கரையும் பிளவை சூலைகள் தீரும்.

அரையாப்புக் கட்டிக்கு வேறுமுறைப்பற்று

லிங்கம்	பலம்	1/4
அரிதாரம்	,,	,,
குங்கிலியம்	,,	,,
கரும்பவளம்	,,	,,
அபினி	காசியிடை	1
பெருங்காயம்	பலம்	,,

இவைகளை நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு திருகுகள்ளிச் சாறுவிட்டு மைபோல் அரைத்து பிளவை பவுத்திரம் கட்டிகள் அரையாப்பு சூலைபதினெட்டுக்கும் இதைமேல் பூசிக்கொண்டுவர கட்டிகள் கரையும் வீக்கங்கள் வாடும்.

சகல விதமானக் கட்டிகளுக்கும் மேல்பூசும் பற்று

கடுக்காய்	பலம்	1/4
சுக்கு	,,	,,
கரும்பவளம்	,,	,,
நாபி	,,	,,
பெருங்காயம்	,,	,,
அபினி	காசியிடை	1
சித்திரைமூலம்	,,	1/4
நேர்வாளப் பருப்பு	,,	,,
எருக்கன்வேர்	,,	,,

இவைகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு எருக்கன் பால்வார்த்து மைபோல் அரைத்து சர்வகட்டிகளுக்கும் மேல் பற்றுப்போடக் கட்டிகள் கரையும் அல்லது உடைந்து உபாதை தீரும்.

சகலவிதக் கட்டிகட்கு மேல்பூசும் வேறுமுறைப்பற்று

ஊமத்தங்காய்	பலம்	1/4
சித்திரமூலம்வேர்	,,	,,
அழிஞ்சில்	,,	,,
மகிழம்பருப்பு	,,	,,
அபினி	காசியிடை	1
கஞ்சா	,,	,,

இவைகளை நிறுத்தெடுத்து எருக்கன்பால் வார்த்து அரைத்து கட்டிகள் மீது பற்றாகப்போட்டுக் கொண்டுவர கட்டி கரையும் அல்லது உடைந்து உபாதை தீரும்.

சர்வவிஷ வீக்கங்களுக்கும் மேல்பூசும்பற்று

கல் சுண்ணாம்பு முருங்கைப்பட்டை வெங்காயம் வசம்பு பேய் பீர்க்கெலை இவைகளை ஓர் நிறையாக நிறுத்தெடுத்து யெருக்கன்பால் விட்டு மைபோல் அரைத்து அரையாப்புகட்டி முதல் பலவிதமானக் கட்டிகட்கும் மேல்பற்றாகப்போட கட்டிகள் கரைந்து அல்லது பழுத்து உடைந்து உபாதைகள் தீரும்.

இரணங்களுக்குப் பிளாஸ்திரி

ஒருபலம் குங்கிலியத்தை வெண்ணையில் கலந்துக் கடைய வெண்ணையானது திரளும் அதைவழித்து டப்பியில் அடக்கஞ்செய்து வைத்துக் கொண்டு இரணங்களுக்குச் சீலையிற்றடவிப் போட்டுக் கொண்டு வர ரத்தம் சீழ் போகும் எரிச்சல் புடைச்சல் தீரும் நரம்புவலியுடன் இசுவானதும் போகும் இரணம் ஆறியுலரும்.

சர்வரணங்களுக்கும் முலாம்

லிங்கம்	பலம்	1/4
பால்த்துத்தம்	,,	,,
சிங்கி	,,	,,
கெந்தி	,,	,,
குங்கிலியம்	,,	,,
ரசகர்ப்பூரம்	,,	,,
கடுக்காய்	,,	,,
மாசிக்காய்	,,	,,

இவைகளை நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு பசும்வெண்ணை போட்டு மூன்று நாள் வரைக்கும் அரைத்து பனிநீர்விட்டு அரைத்து வழித்து முலாமை டப்பித் தன்னில் அடக்கஞ்செய்து வைத்துக் கொண்டு புண்புரை முதலான விரணங்களுக்கு இந்த முலாமைப் போட்டுக் கொண்டு வர சகல ரணங்களும் ஆறி யுலரும்.

சர்வரணங்களுக்கும் வேறு முறை முலாம்

மாசிக்காய்	பலம்	1/2
கடுக்காய்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,
லிங்கம்	,,	,,
கெந்தி	,,	,,
சிங்கி	,,	,,
பூரம்	,,	,,
குங்கிலியம்	,,	,,

இவைகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு பசுவின் வெண்ணை விட்டு மூன்று நாள் வரைக்கும் அரைத்து பனிநீர்விட்டு ஆட்டிக்கழுவி குற்றம் போக்கி மூலாந்திரண்டு வரும்போது மூலாமைவழித்து டப்பியில் அடக்கஞ்செய்து வைத்துக்கொண்டு சகல ரணங்களுக்கும் இந்த மூலாமைப் போட்டுக் கொண்டுவர ஆறியுலரும்.

தடிப்பு முதலிய அரையாப்புகள் கரைவதற்குக்கட்டு

காசிக்கட்டி	பலம்	1/4
சேங்கொட்டை	,,	,,
காடிகாரம்	,,	,,
கொடிவேலி	,,	,,
பனவெல்லம்	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அரைத்து அரையாப்பு கட்டியின் மீது வைத்து மூன்றுநாள் கட்டிக்கொண்டுவர கட்டியானது கரையும் அல்லது உடையும்.

குங்கிலியம்	பலம்	1

நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு பசும் வெண்ணெய் சேர்த்து மைபோல் அரைத்து வைத்துக் கொண்டு சீலையில் தடவி அரையாப்பு முதலிய விரணங்களின் மீது போட்டுக் கொண்டு வர ஆறியுலரும்.

கொருக்கு முதலிய புண்களுக்கு மேற்பூசும் மூலாம்

மிருதார்சிங்கி	விராகனிடை	1 1/4
கெந்தி	,,	,,
பூரம்	,,	,,
குங்கிலியம்	,,	,,
பால்த்துத்தம்	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு தேங்கா நெய்விட்டு மைபோல் அரைத்து அதில் முறையே ஏழுதரம் ஜலம் விட்டு அரைத்துக் கழுவி வழித்தெடுத்து வைத்துக் கொண்டு அரையாப்பு கொருக்கு முதலிய விரணங்களுக்கு மேல்பூச ஆறியுலரும்.

சர்வ பருவுகளுக்கும் பத்து
கவிவிருத்தம்

கண்டுநற்கருங்கல் லறைத்தேயதில்
அண்டுகல்வெல்லம் அவ்விடைதூக்கியே
ரெண்டுங்கூட்டி ரிணமதில்பத்திடில்
பண்டுமீரும் பருவுடைந்தோடுமே.

இதுவுமது

ஒடுமாஞ்சிழுவுளன் முளையற்றபின்
காடுமேமுருங்க யிலைச்சார்பிழிந்
தோடுமெல்லிய சீலையிலூட்டியே
போடுமருந்து பொழிந்திடச்சாடுமே.

வெட்டுபுண்களுக்குக் கட்டுமருந்து

சாடுங்கோடைக சாலையிலைபரி
தேடும்வேண்டியே தேயிருநேரமும்
மாடுங்கையினால் தாக்கியீரைந்துநாள்
போடுமெல்வெட்டு புண்ணாறிக்கண்டதே.

சர்வரிணங்களுக்கும் அக்கினி பிளாஸ்திரி

பொய்யாதுமாந்தர்க்கு புகலுவேன்வாகடம்
அய்யாபிளாஸ்த்திரி அரையுவேன்வகையுடன்
மெய்யாவீர மிராகனிருபது
தெய்யாவிளக்கெண்ணை துவளவரைத்திடே.

இதுவுமது

அரைத்துச்சல்லாவிலழிந்தடப்பூசியே
விரைத்தகிரந்திபுண் விரும்ரணத்திற்கு
உரைத்தபடியாக வுரிதியான்பூட்டிடில்
கரைத்தரணங்களுங் காணாமலோடுமே.

சர்வரணத்திற்கும் உட்கொள்ளவும் மேற்பூசவும்
பவுத்திரத்திற்கும் பற்றிடவும் மருந்து

வெளுத்தவெண்ணையும் வெண்ணொச்சிப்புங்குடன்
வளுத்தபூவும்வரிந்திவகையொன்று
இனித்தசார்படியெள்ளெண்ணெய்தான்படி
பளிக்கைதுத்தமும் பாங்குடன்கேந்தியே.

இதுவுமது

ஆணசூதம் வெட்பாலைப் பரங்கியும்
மாணசெந்தூரமானவ லிங்கமும்
காணவேக மடக்கடிதீபத்தில்
பாணமாயெடுத்திருனேற மருந்திடே.

இதுவுமது

வருந்திசூலை வரும்வெடிப் போக்கிடும்
புருந்துதொண்டையும் பொற்சதைசிங்கியும்
மறிகிரந்தியு மாறாதப் புண்களும்
பறிபரங்கியும் பகர்குஷ்டமேகுமே.

சர்வரணங்களுக்கும் உட்கொள்ளும் யெண்ணெய்

சதுரக்கள்ளிவேர்	பலம்	1/2
கொடிவேலிவேர்	,,	,,
எருக்கன்வேர்	,,	,,
கொடிக்கள்ளிவேர்	,,	,,
சித்திரமூலம்வேர்	,,	,,
அமுக்குராவேர்	,,	,,
சூதம்	,,	1/4
கெந்தி	,,	1/2
செந்தூரம்	,,	,,

இந்த ஒன்பது தினுசுகளையும் நிறுத்தெடுத்துப் பொடித்து ஒருபடி சித்தாமணக் கெண்ணெயில் போட்டு அடுப்பேற்றி யெரித்துக் காய்ச்சி

பதத்திலிறக்கிவடித்து வைத்துக்கொண்டு காலையில் ஒரு சிறு கரண்டி விதம் 3 நாள் உட்கொள்ள சகல ரணங்களும் ஆறியுலரும் இச்சாபத்திய மாகக் கொள்ளவும்.

அரையாப்பு முதலான இரணங்களுக்குக் களிம்பு

லிங்கம்	பலம்	1/4
மிருதார்சிங்கி	,,	,,
ரசக்கர்ப்பூரம்	,,	,,
வெள்ளைக்குங்கிலியம்	,,	,,
கடுக்காய்	,,	,,
மாசிக்காய்	,,	,,
காசுக்கட்டி	,,	,,
தான்றிக்காய்	,,	,,

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு பொடித்து பசும்வெண்ணை சேர்த்து மைபோல் அரைத்து வழித்து தண்ணீரில் ஒருநாள் மெதக்கப்போட்டு மறுநாள் யெடுத்து இரணங்களின் மீதுபோட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறியுலரும்.

நெடுநாள் பட்ட விரணம் ஆறமருந்து

நெடுநாள் பட்டவிரணங்களின் மீது விளிம்பைச்சுற்றிலும் மெதுவாய் துரிசை பூசிக்கொண்டு வந்தால் கூடிய சீக்கிரத்தில் ஆறியுலரும்.

இதுவுமது வேறுமுறை

மூன்றுகிறேயின் துரிசை ஒரு அவுன்சு தண்ணீரில் கலக்கி தினம் இரெண்டு தரம் புண்களில் விட்டுப் பின்பு மூன்று அல்லது நாலுநாளைக் கொருதரம் துரிசின்யிடையை ஒவ்வொருகிரேயின் வீதம் வியாதிக்காரனின் உணர்வுபோல் அதிக நோவும் சூடும் இல்லாமல் சிற்றெரிவும் உஷ்ண மும்மாத்திரம் கொடுக்கும்படியாய் (1) அவுன்சு தண்ணீரில் (10) கிறேயினாகுமட்டும் அதிகரிப்பித்துக் கொள்ளவேண்டும் அதில் அதிக யெறிவுண்டானால் துரிசின்காரம் குறையும்படி சற்றதிகமாய்ச் சலத்தைக் கூட்டிக் கொள்ளவேண்டும் மேற்படி சலதைக் காலையும் சாயந்திரமும் புண்களில் விட்டு இடைவேளைகளில் அசிரிப்போல் டீசைக் கட்ட வேண்டும் துன்மாமிசத்திற்கு அதின்மேல் துரிசை மூன்று அல்லது நாலுதினத்திற்கு

ஒரு தரம் தடவவேண்டும் பிராயமானவர்களுக்காவது வாயினுள்வரும் புண்களுக்கு (5) கிறேயின் துரிசை நேர்மையாய் தூள்செய்து அரை அவுன்சு தேனில் கலந்து விரலால் தொட்டு யிட வேண்டும் பிள்ளை களுக்கும் பாலகர்களுக்கும் காணும் கண்ணோய்களுக்கு ஒரு கிறேயின் துரிசை ஒரு அவுன்சு சலத்தில் கலக்கி தினம் மூன்று அல்லது நாலுதரம் கண்ணைக் கழுவினால் குணமாகும் கடினமான கண்ணோய்களுக்கு ஒரு அவுன்சு தண்ணீரில் இரெண்டு கிரேயின் துரிசைக் கூட்டிக்கொள்ள வேண்டும்.

படர்தாமரைக்கும் தலைசொரிக்கும் மருந்து

துரிசின்தூள்	கிறேயின்	20
மாசிக்காய்தூள்	அவுன்சு	1
மெழுகுபிளாஸ்திரி	,,	,,

இந்த மூன்று தினுசையும் ஒன்றாய்ச் சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு சொரியுள்ள தலையில் நன்றாய்த் தேய்த்து வர சொரியானது மாறும். படர்தாமரைக்கும் இவ்விதமே தேய்க்கவேண்டும் சொரி சிரங்குக்கு ஒரு அவுன்சு துரிசை அரைப்புட்டி தண்ணீரில் கலக்கி பூசவேண்டும் நமச்சலடங்கும் சொரியானது மாறும்.

அட்டை கடிக்கு மருந்து

அட்டையானது கடித்தவாயில் நின்று இரத்தபோகிறதற்கு கொஞ்சம் துரிசைதூள் செய்துக்கடிவாயில் வைக்க நிற்கும்.

மூக்கில் வரும் ரத்தம் நிற்க

மூக்கினிடமாக நின்று மிகுதியாய் இரத்தம் போகின்றதற்கு (4) கிறேயின் துரிசை ஒரு அவுன்சு தண்ணீரில் கலக்கி மூக்கினுள் விட வேண்டும். ஆனால் இது படிகாரத்திற்கு தாழ்ச்சியாய் யிருக்குமெனவறிக.

பக்கபிளவைக்கும் தசையழுகிய புண்களுக்கும் மருந்து

பக்க பிளவைகளுக்கும் தசையழுகியப் புண்களுக்கும் அசற்றுள்ள புண்களுக்கும் வியாதிக்காரனின் மனம் போல குளிர்ந்த சலமாவது வெந்நீராவது இரெண்டு மூன்று சட்டிகள் நிறைய எடுத்து வைத்துக்

கொண்டு அதை ஒரு செம்பிலாவது கெண்டியிலாவது எடுத்துப் புண்ணின்மேல் தொடர்ந்த தாரையாய்விடவேண்டும் இப்படி தினந்தோறும் இரண்டு தரஞ்செய்ய வேண்டும் இதினால் மிகுந்த அசரு யெடுக்கப் படுகிறது மன்றி சிலநாளானவுடன் புண்சவுக்கியப்பட ஆரம்பிக்கும் புண் காலிலாவது கையிலாவது யிருக்குமாகில் நோயாளிதான் தானே சலத்தை விட்டுக் கொள்ளலாம் முதுகிலாவது கழுத்திலாவது உண்டாயிருக்கில் வேரே ஒரு மனிதனைக் கொண்டு செய்விக்க வேண்டும். சலத்தைப் புண்ணின்மேல் ஒன்றிரண்டு அடி உயரத்தில் நின்று விடவேண்டும். அசறுமுற்றும் நீங்கி புண்சிவப்பாயும் சவுக்கியமாகிற இலட்சணமுடைய தாயும் காணும்பொழுது சலத்தை நிறுத்தி புண்களில் மெழுகு பிளாஸ்திரியை யிடவேண்டும் சலம் விடுகிறது குறைந்தாலும் ஒரு மணிநேரம் வரையும் விடவேண்டும் இடநேரங்களில் கள் சேர்ந்த போல்டீசை வைத்துக்கட்ட வேண்டுமெனவறிக.

மூத்திரம் அடப்பு நிவாரணமாக

மூத்திரம் போகாமல் தடைப்பட்டிருக்கின்றதற்கு சீலையை சூடு தண்ணீரில் தோய்த்து வியாதிகாரன் சகிக்கத்தக்கதான சூடுடனே வயிற்றின் மேலும் அடிவயிற்றின்மேலும் இட்டு ஆறிப்போகிற பொழுதெல்லாம் வேறே ஒருச்சீலையைச் சுடுத்தண்ணீரில் தோய்த்து இப்படி அடிக்கடி மாறிமாறி இடவேண்டும்.

வேறுவிதப் பிரயோகம்

மூத்திரம் போகாமல் தடைப்பட்டிருக்கின்றவர்களுக்கு ஒரு தொட்டி யிலாவது பரந்திருக்கப்பட்ட பருஞ்சட்டியிலாவது கிடைக்குமாகில் அதில் சுடுத் தண்ணீரைவிட்டு நோயாளியைப் பார்த்து அல்லது இருபது மினிட்டு நேரம் சலத்தில் உட்கார வைத்திருக்க வேண்டும் இப்படி செய்தால் மூத்திரமானது உடனே போகும் உபாதை தீரும்.

தொண்டைப்புண் நிவாரணமாக

சகலமான தொண்டைப் புண்களுக்கு சுடுதண்ணீரில் ஆவியை உள்ளுக்குச்சுவாசம் வாங்கினால் அதிக குணம் உண்டாகும். ஆனால் சளித்தன்மையுள்ள வெண்டைக்காய்களில் (12) அல்லது அதிலதிகம் எடுத்துத் துண்டுகள் செய்து சலத்தில் வேகவைத்து அந்த சலத்தின்

ஆவியைச் சுவாசம் வாங்கினால் பலன் அதிகரிக்கும் மேற்படி சலத்தை வாய்ச்சுறுங்கின பாத்திரத்தில் விட்டு அதனாவி தொண்டையினுள் நன்றாய்ச் செல்லும்படி வாயை பாத்திரத்தின் வாயின் மேல் அடுத்து வைத்துச் செய்யில் தொண்டை புண் ஆறும்.

அட்டை விடும் விதம்

அட்டைகளைத் தகுந்த வியாதிகளுக்குத்தக்க சமயம் பார்த்து முறையாய் விடுகில் அனேக வியாதிகளுக்கு உபயோகமாயிருக்கும் ஆனால் அவைகளை விடுகிறதில் சாக்கிறதை அவசியமானதா யிருக்கின்றது.

அவைகளைக் கடிக்கப் பண்ணுவதற்கு இரெண்டு மாதிரி உண்டு முதலாவது ஒவ்வொரு அட்டையாகக் கையில் பிடித்து வேண்டியது கையளவும் கடிக்கவிடவேண்டும். இது மிகுந்த சலிப்பும் தாமதமுள்ள விதமற்ற நல்லமாதிரி எப்படியென்றால் தேவையான அட்டைகளை ஒருகிளாசு பாத்திரத்திலாவது கோப்பையிலாவது இட்டுக்கடிக்க வேண்டிய ஸ்தலத்தில் கவித்துப் பிடித்திருக்க வேண்டும் சற்று நேரஞ்சென்ற பின் அதை நீக்கினால் அட்டைகள் கடித்துக்கொண்டு இருக்கின்றதைக் காணலாம் கிளாசு பாத்திரமாவது கோப்பையாவது ஆசரில்லாவிட்டால் முதற் சொன்னபடி ஒவ்வொரு அட்டையாகக் கையிற்பிடித்து கடிக்க வேண்டிய ஸ்தலம் தப்பாமல் விடவேண்டும்.

அட்டையை விடவேண்டிய பக்கத்தில் சவுக்காரத்தை தேய்த்துச் சுடு தண்ணீரால் நன்றாகக் கழுவித் துடைத்துப் பின்பு விடுகில் உடனே கடிக்கும் இப்படிச் செய்தும் உடனே கடியாவிட்டால் (15) அல்லது (20) மினிட்டு நேரம் உலர்ந்த அழுக்கில்லாத சீலையிலிட்டு மேலுள்ள இரத்தத்தைப் போக்கினதின் பின்பு விடவும் இதிலும் கடியாவிட்டால் தோலின்மேல் கொஞ்சசங்கீரி அதில் நின்றுவறும் இரத்தத்தைக் கடிக்க வேண்டிய ஸ்தலமுழுதும் பூசியும் விட்டாற்கடிக்கும் எந்த விதங்களிற் கடியாமலிருக்கிலும் கடைசீப் பிரயோகத்தால் நிச்சயமாய்க்கடிக்கும்.

அட்டைகள் இரத்தங் குடித்து (15) அல்லது (20) மின்னிட்டுக் கழிந்தபின் விழாவிட்டாலும் வேண்டியபோது அவைகளை நீக்கிவிட வேண்டுமானாலும் கொஞ்சம் உப்பைத் தூவவுஙவது காடியை விடவாவது செய்தால் உடனே விழும்.

அட்டை கடித்த முறிவில் நின்று இரத்தம் போனது போகாதிருந்தால் சுடு தண்ணீரால் ஒற்றிடங் கொடுக்க வேண்டும் .

இரத்தம் மிகுதியாய்ப் போகுறதை நிறுத்த வேண்டுமானால் முறிவின் மேல் விரலாலமுத்திப் படிகாரத் துளையாவது துரிசின் தூளையாவது வைக்க வேண்டும்.

அட்டை மூலத்துவாரம் மூக்கின் துவாரம் மற்றெந்த துவாரத்தினுள்ளாவது ஏறிவிட்டால் உப்பு தண்ணீராவது காடியாவது உள்ளுக்குச் செலுத்த உடனே வெளியாகி விழும்.

முக்கியமாய்க் கழுத்தில் பொருமிக்காணும் நரம்பின் மேல் அட்டைகள் விடக்கூடாது.

நோயுள்ள கட்டிகளின்மேல் விரலை வைக்கும்பொழுது நாடியடிக்குமானால் அதின்மேல் அட்டைகளைவிடாமல் அவற்றின் சுற்றில் சற்றுதூரம் தள்ளிவிட வேண்டும்.

கண்ணிமைகளிலாவது ஸ்திரீகளின் தனத்திலாவது ஆண்குறித்தோளின் மேலாவது அட்டைகளை விடுகிற சில சமயத்திற் யெறிவந்த முண்டாகு மாதலால் அந்த ஸ்தலங்களில் விடக்கூடாது.

குழந்தைகளுக்கு அட்டைகளைவிட்டால் பிராயமானவர்களைப் பார்க்கினும் மிகுதியாய் இரத்தம் போகும் ஆனதால் மிகுந்த பத்திரம் வேண்டி யிருக்கின்றது எப்பொழுதும் அட்டைகளை தேகத்தில் எவ்விடங்களிற் கூடிய மட்டும் மாமிசங் குரைந்து எலும்பு மேற்பட்டு யிருக்கின்றதோ அந்த ஸ்தலங்களைப் பார்த்து விட வேண்டும் இப்படிச் செய்கிறது ஒரு வேளை ரத்தம் விடாமல் பாயுமாகில் அதை நிறுத்தும் பொருட்டாய் அழித்திப் பிடிக்கிறதற்கு இசைவாயிருக்கும் எப்பொழுதும் குழந்தைகளுக்குக் காலையில் விடவேண்டும் சூரியன் அஸ்தமித்த பின்பு ஆனால் இராத்திரி எல்லாரும் தூங்குஞ்சமயத்தில் கடிவாயில் நின்று அதிக இரத்தம் பாய்ந்து குழந்தைகள் மறிக்கிறதற்கு யேதுவாயிருக்கும்.

குழந்தைகளின் வயசுக்குத்தக்க அட்டையின் எண்ணம் நிதானிக்க அவசியமானதால் கீழ்யெழுதியப்படிக்குச் செய்ய வேண்டும்.

ஆறு மாதத்திற்குற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு ஒரு அட்டைவிட வேண்டும்.

ஒரு வருஷத்திற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு இரெண்டு அட்டைவிட வேண்டும்

இரெண்டு வருஷத்திற்குக் கீழ்ப்பட்டக் குழந்தைகளுக்கு மூன்று அட்டைவிட வேண்டும்.

மூன்று வருடத்திற்குக் கீழ்ப்பட்டக் குழந்தைகளுக்கு நாலு அட்டை விடவேண்டும்.

ஆனால், தலைநோவுடன் வரும் சுரங்களுக்கு அட்டைகள் மிகுந்தப் பிரயோகமாயிருக்கின்றன வியாதியின் துவக்கத்தில் பிணியாளி வாலிபனாயும் பெலவானாயும் இருப்பானாகில் நெற்றியொன்றில் (4) அல்லது (6) அட்டைவிட வேண்டும் பிடரியின் மேற் பக்கத்தில் கடிக்காவிட்டால் அதிகுணங்கொடுக்கும் சுரத்துடனே மார்பிலும் வயற்றிலும் கடினமான வலிகளுக்கு (8) அல்லது (10) அட்டைகளை உடனே வலியின் மேல்விட வேண்டும்.

மூலமுளையின் இரத்தப்போக்கு நின்ற காரணத்தால் வருந்தலை யிடிக்கு மூலத்துவாரத்துனருகே அட்டையைக் கடிக்கப் பண்ணினால் குணப்படும் அட்டைகள் மூலத்துவாரத்தினுள் ஏறிப்போய்விடாமல் எச்சரிக்கையாக யிருக்கவேண்டும்.

சூதகம் சடுதியாய்நின்ற காரணத்தாலுண்டாகும் தலைநோவுக்கு அட்டைகளை உள்துடையில் விடவேண்டும்.

விப்புருதிகள், பருக்கள், அரையாப்புகள், நசிவுகள், சுளுக்குகள் கடிகள் மற்றும் தோலின் மேல் வரும் இரத்தச் சுரப்புகள் இவைகளின் ஆரம்பத்தில் வலியும் சூடும் அதிகமா யிருக்கும்பொழுது (6) அல்லது (8) அட்டைகள் விட்டுச் சுடுதண்ணீரால் ஒத்திடங் கொடுத்தால் வலி தீர்ந்து வியாதியைப் போக்கும்.

அரையாப்புகளுக்கு முக்கியமாய் ஆரம்பத்தில் அதிக வேதனை இருக்கிறபொழுது பிரயோசனமாம்.

கக்கிருமல் தொடங்கினபொழுது பிடரியின் மேற்பக்கத்தில் அட்டையை விட்டால் மிகுந்த பலனாயிருக்கும்,செய்யவேண்டிய முறைமை எவ்வித மெனில் குழந்தைகளின் வயது ஒன்றுக்கு அட்டை வீதம் முறையாய்க் கூட்டி ஆறுவயது வரைவிடலாம் அப்புறம் எத்தனை வயதாயிருக்கினும் ஆறு அட்டையே போதுமானதாயிருக்கின்றது. ஆனதால் இப்படி விட்டு அட்டைகள் விழுந்தபின் ஒரு கடுகு போல்ட்டீஸ் ஆவது ஒரு சின்ன பிளிஸ்டர் ஆவது செய்து கடிவாயை விட்டுவிட்டு இரண்டு தோள் பட்டைக்கும் நடுவில் வைத்துக் கட்ட வேண்டும். அட்டைகளையும் கடுகு போல் டிசையும் மறுபடியும் அவசியம் போல் இட்டுக் கொள்ள வேண்டும்.

அநேக விதக் கண்ணோய்களுக்கு அதிகசூடும் வலியும் வீக்கமும் சிவப்பு மிருக்கிற பொழுது (4) அல்லது (6) அட்டைகளைக் கடைக் கண்களின் அருகேயிருக்கும் பொட்டுகளில் விட்டால் பலனைக் கொடுக்கும் வியாதியானது, சொஸ்தமாகும்.

சர்வ படைகளுக்கு மேற்பூசும் மாத்திரை

கெந்தகம்	பலம்	1/2
ரசம்	,,	,,
குங்கிலியம்	,,	3
மிருதார்சிங்கி	,,	1/4

இவைகளுடன் சீமை அகத்தி பொன்னகத்தியிலைப் போதுமான வரைக்குஞ் சேர்த்து மேற்படி மருந்துகளை கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு தாமரைப்படை, யெச்சைப்படை, கடுவன், அரைக்கடுவன் குழந்தைக் கணுக்கால் கடுவன் மங்கு மூக்கின் மேல்வரும் புண்களுக்கு இந்த மாத்திரையை வெள்ளாட்டுப்பால் அல்லது எலுமிச்சம் பழஞ்சார் இவைகளை விட்டு உரைத்து மேல் போட்டுக் கொண்டு வர குணமாகும்.

நெடுநாள் நாற்றமுள்ள படர்புண்களுக்குச் சேர்வை சீலை

நுண்மையாய்த்தூள் செய்த படிகாரம் (8) திராம் காசுக்கட்டி (2) திராம் அபின் ஒரு திராம் மெழுகு பிளாஸ்திரி (2) அவுன்சு இவையில் அபினி முன்னாக பிளாஸ்திரியுடன் நன்றாய்க் கலந்துகொண்டு பின்பு மற்ற மருந்துகளை யெல்லாம் கூட்டி அரைத்து இதை ஒரு துண்டுச் சீலையில்

தடவி காலையிலும் சாயந்திரமும் புண்ணில்விட வேண்டும் வேதனையை யுண்டாக்குமாகில் மேற்படி சேர்வையின் காரத்தைக் குறைக்கும்படியாய் மெழுகு பிளாஸ்திரியை அதிகரித்துக் கூட்டிக்கொள்ளவேண்டும். இரணங்களில் அதிகமாய் வளரும் துர் மாமிசங்களுக்குப் பொரித்த படிகாரத்தூளில் கொஞ்சந்தூவினால் சதை கரையும்.

மூட்டு வீக்கங்களுக்குச் சீலை

மூட்டு வீக்கங்களுக்கும் அடி சதைகளுக்கு இவையின் காரணத்தால் உண்டாகிற வீக்கங்களுக்கும் அரை புட்டிக்காடியும் அவ்வளவு சாராயமும் ஒன்றாய் கலந்து (4) திராம் படிகாரத்தைக் கரைத்து அதில் சீலையை நனைத்து மேற்படி வீக்கங்களின் மேல் போட்டுக்கொண்டு வர குணமாகும்.

இரண வைத்திய சிந்தாமணி முற்றிற்று

இரண்டாமத்தியாயம்

கண்டா அவிழ்த மஞ்சரி

சர்வ ரணங்களுக்கும் உட்கொள்ளும் யெண்ணெய்

கொடிக்கள்ளிவேர்	பலம்	1/2
சித்திரமூலம் வேர்	,,	,,
எருக்கன்வேர்	,,	,,
அமுக்கிராங்கிழங்கு	,,	,,
பாதரசம்	விராகனிடை	5/8
ரசசெந்தூரம்	,,	,,
கெந்தகம்	,,	,,

இவைகளை நிறுத்தெடுத்து வேறுவகையாவும் இடித்து சூரணித்து மற்ற சரக்குகள் யாவும் கல்வத்திலிட்டு விளக்கெண்ணெய் வார்த்து இரண்டு ஜாமம் அரைத்து ஒரு மண் பாண்டத்தில் அரைப்படி வெளக்கெண்ணை வார்த்து வீசம்படி கொடிக்கள்ளிச்சார் விட்டு மருந்தை அதில் போட்டுக் கலக்கி களச்சி சார் வீசம்படி விட்டு அடுப்பேற்றி யெரித்து மெழுகுபதமாய்க் காச்சி வடித்துவைத்துக் கொண்டு காலையில் உச்சிக்கரண்டி விதம் 5 நாள் அல்லது 7 நாள் சாப்பிடவும் சகல விரணங்களுமாறும் இச்சாபத்தியம் அரைகாரம் சேர்க்கவும் சுட்டபுளி வறுத்த உப்புச் சேர்ப்பதே மிகவும் உத்தமமெனப்படும்.

பக்கசூலை கெர்ப்ப சூலைக்கு உட்கொள்ளும் யெண்ணை

முளகரணை யிலையை உரலிலிட்டு நீர் வார்த்து இடித்து (6) பலம் ரசம் பிழிந்துக்கொண்டு அதில் (6) பலம் சித்தாமணக்கெண்ணை விட்டு உரித்தெடுத்த பூண்டு திருகு (2) பலம் சேர்த்து அடுப்பேற்றி யெரித்துக் காய்ச்சி வடித்துவைத்துக்கொண்டு திரேக திடப்படி (3) நாளைக்குக் காலையில் உச்சிக்கரண்டி வீதங்கொடுத்துவர பேதியாகும் பேதியதிகமானால் நோய் நீக்கினதென்று தெரிந்துக்கொண்டு யெண்ணெயை நிறுத்திவிடவும் இச்சாபத்தியம்.

கைகால் பிடிப்புக்கு உட்கொள்ளும் யெண்ணை

சுத்திசெய்தவாளம்	விராகனிடை	1/2
ஏலம்	,,	1
சுக்கு	,,	,,
பூரம்		

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு விளக்கெண்ணெய் வார்த்து அரைத்து ஒரு பாண்டத்தில் அரைபலம் புங்கம்பாலும் அஞ்சி பலம் வெளக்கெண்ணையும் விட்டு அரைத்த மேல்படி மருந்தை யெண்ணையில் கலக்கி மூன்றுநாள் சூரிய புடம் வைத்து யெடுத்து வைத்துக்கொண்டு காலையில் உச்சிக்கரண்டி வீதம் (5) நாள் அல்லது (7) நாள் சாப்பிடவும் கைகால் பிடிப்பு தீரும் சுட்ட புளி வறுத்த உப்பு கூட்டவும்.

அச்சுரத்திற்கு யெண்ணை

புளிகருணை கிழங்கு	பலம்	1/2
வசம்பு	,,	,,
வெள்ளெருகு	,,	,,
வெங்காயம்	,,	,,
நஞ்சருப்பான்வேறு	,,	,,
நிலப்பனங்கிழங்கு	,,	,,
பெருங்கிழங்கு	,,	,,
தும்மராஷ்டகம்	,,	,,
கருஞ்சீரகம்	,,	,,
கடுகுரோகணி	,,	,,
காட்டுக்கருணைக்கிழங்கு	,,	,,
ஆத்துதுமட்டிக்காய்	,,	,,
சவுரிக்கிழங்கு	,,	,,

இந்த பதிமூன்று தினுசுகளையும் பஞ்சுபோலிடித்து அரைபடி வெளக்கெண்ணையில் போட்டு அடுப்பேற்றிக்காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு காலையில் உச்சிக்கரண்டி விதம் சாப்பிடவும் (4) (5) வீசை பேதியாகும் அதிகமாய் பேதியானால் ஒமங்கொண்டு வந்து வென்னீரில் அரைத்து பால்பிழிந்து ஒரு பாலாடை அல்லது ரெண்டு பாலாடை சாப்பிட பேதி நிற்கும் ஆனால் யெண்ணெய் (3) நாள் கொடுக்கவும் பத்தியம் சுட்டபுளி வருத்த உப்பு சேர்க்கவும் சிறு பிள்ளையானால் தாய் பத்திய மிருக்கவேண்டும்.

கொருக்கு வெள்ளைக்கு யெண்ணெய்

பூரம்	விராகனிடை	1/2
ஓமம்	,,	,,
ஏலம்	,,	,,
லவங்கம்	,,	1/4

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு செம்பருத்திச் சார்விட்டு மைனம்போல் (4) ஜாமம் அரைத்து (2) பலம்

வெளக்கெண்ணெயில் கலக்கி ஒருநாள் சூரிய புடம் வைத்து மறுநாள் முதல் காலையில் உச்சிகரண்டி விதம் (5) நாள் அல்லது (7) நாள் சாப்பிடவும் கொருக்கு வெள்ளை முதலான நோய் தீரும் இச்சாபத்தியம் மறுபத்தியமும் அவ்வாரே யிருக்கவேண்டும்.

அயத்தெண்ணெய்

அயம் பலம் (1) எலுமிச்சம்பழம் (15) அறுத்து உப்புவைப்பது போல் அயத்தையுள்ளே வைத்து ஒருவீசை சாம்பிராணி பூண்டென்கிற பிரமிவழுக்கையைச் சுத்தஞ்செய்து பேர்பாதியாக்கி ஒரு பெரிய பாண்டத்தில் போட்டு (4) படி ஜலம்விட்டு மேற்படி பழத்தை வைத்து அதில்,

வெள்ளைவெங்காயம்	பலம்	4
சுக்கு	,,	2
கடுக்காய் தோல்	,,	,,

இவைகளைப் பொடித்து மேல்தூவி பின்பேர் பாதி யிலையை மூடி அசையாமல் அடுப்பேத்தி தினமொன்றுக்கு இரெண்டு நாழிகை ஒன்பது நாள் யெரிக்கவும் சிதறச் சுண்டின பிறகு நன்றாய் பிசைந்துக் கிட்றயால் பிழிந்து சரி எடை சித்தாமணக்கெண்ணை சேர்த்து மெழுகு பதங் காச்சவும் அரையணாயிடை பிரமாணம் சாப்பிட்டு ரெண்டு நாழிகை பொறுத்து தயிர்சாதம் சாப்பிடவும் தீரும். வியாதிகள் பித்தம் நார்ப்பது தலைச்சுண்டு தலைப்புத்து தலைநடுக்கல் தேகநடுக்கல் காமாலை தலைமயிர் விழுந்து போகிறது கால்கை அசதி பித்தபாண்டு முதலியவைகள் நீங்கும் விந்துகட்டி பலம் அதிகமாகும் இச்சாபத்தியம்.

குழந்தைகட்கு மாந்தயெண்ணெய்

சன்னாசி கிழங்கென்று சொல்லுகின்ற செம்பிரண்டை நெடுங்கொடியாய்ப் படராத குருங்கொடியின் கிழங்கு முள்ளங்கிக் கிழங்கு போலிருக்குமதை பில்லை பில்லையாக திருத்தியதை பலம் (25).

வெங்காயம்	பலம்	10
உரித்தவெள்ளைப்பூண்டு	,,	2 1/2
சித்தாமணக்கெண்ணை	வீசை	1 1/4

இவை நான்கையும் சேர்த்து அடுப்பிலிட்டு துடுப்பினால் துழாவச் சிலங்கைபதத்தில் யெடுத்து வடித்து வைத்துக்கொண்டு அதில்

கரிமஞ்சள்	பலம்	1/2
வெந்தயம்	,,	,,
கார்ப்போகவரிசி	,,	,,
வெட்பாலையரிசி	,,	1
கருஞ்சீரகம்	,,	1/2

இவைகளை இளம் வறுப்பாய் வறுத்து வடிகட்டி மேற்படி யெண்ணெயில் கலக்கிக் குழந்தைகளுக்கு ஒருவிசை ஒருகரண்டி கொடுத்தால் மாந்தம் அணுகாது இச்சாபாத்தியம்.

கரப்பானெண்ணை உள்ளுக்கும் மேற்பூசுக்கும்

கார்ப்போகவரிசி	பலம்	1/2
சீரகம்	,,	,,
வெட்பாலையரிசி	,,	,,
கருஞ்சீரகம்	,,	,,
ஏலம்	,,	,,
கம்பிப்பிசின்	,,	,,
கடுகுரோகணி	,,	,,

இவைகளையும் பொடித்துச் சிருதுத்திவேர்பட்டை பலம் (5) நையத்தட்டி வெளக்கெண்ணெய்படி அரைவிட்டு மேற்படி சரக்குகளையுஞ் சேர்த்துக் கல்வத்திலிட்டு ஒருசாமம் நன்றாய் அரைத்து மூன்று நாள் சூரிய புடம் வைத்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூச மண்டைக்கரப்பான் கைகால் ரணம் உப்புபோலுதிர்ந்து போம் இச்சாபாத்தியம்.

சகல சுரத்திற்குக்கியாழம்

சுக்கு	பலம்	1/4
மிளகு	,,	,,
சிறுதேக்கு	,,	,,
பேய்புடல்	,,	,,
தூதுவேளை	,,	,,
சித்திரமூலம்	,,	,,

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கருக்கி ஒரு படி சலத்தில் போட்டு கால்படியாகச் சுண்டகாச்சி (3) நாள் (6) வேளை சாப்பிட சகல சுரமுந்தீரும்.

வேறுமுறை சுரத்திற்குக் கியாழம்

பேராமுட்டி	பலம்	1/4
சிறுதேக்கு	,,	,,
சித்திரமூலம்	,,	,,
திப்பிலி	,,	,,
மிளகு	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து ரெண்டுபடி ஜலத்தில் போட்டு கால்படியாக சுண்டக்காய்ச்சி (3) நாள் (6) வேளை சாப்பிட சர்வ சுரங்களும் பறந்து போகும் பத்தியமில்லை.

வேறுமுறை சுரத்திற்குக் கியாழம்

சீந்திற்கொடி	பலம்	1/4
விலாமிச்சம்வேர்	,,	,,
பர்ப்பாடகம்	,,	,,
கோரைக்கிழங்கு		
சிறுதேக்கு		
சந்தனம்		
நன்னாரிவேர்		

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து ரெண்டுபடி ஜலத்தில் போட்டு அரைபடியாகச் சுண்டக்காய்ச்சி (3) நாள் (6) வேளை சாப்பிட சுரமானது நீங்கும்.

பித்தத்திற்குக் கியாழம்

சீரகம்	பலம்	1/4
சுக்கு	,,	,,
பேய்பீர்க்கு	,,	,,
சீந்திற்கொடி	,,	,,
பர்ப்பாடகம்	,,	,,
கொத்தமல்லி	,,	,,

இந்த ஆறு தினுசுகளையும் தட்டிப்போட்டு ஒருபடி ஜலம்விட்டு காப்படியாகச் சுண்டக்காய்ச்சி காலை மாலை மூன்று நாள் சாப்பிட்டுக் கொண்டு வர தலைசுற்றலானப் பித்தமானது அகன்று போகும்.

மேகம் பாண்டு சூலை கிரந்தி குஷ்டம் இவைகட்கு பரங்கிப்பட்டை சூரணம்

(5) பலம் பரங்கிப்பட்டையை நிறுத்தெடுத்து சூரணித்து அதற்குச் சரியிடை வெள்ளைசருக்கரைக்கலந்து ஒரு மண்டலம் (40) நாள் சாப்பிட்டுக் கொண்டுவர மேகம் இருபத்தியொன்றும் சூலை ஆறும் குஷ்டம் பதினெட்டும் கிரந்தியுந்தீரும். ஆனால் பச்சையாகவும் அருந்தலாம்.

ஆறுவித மூலத்திற்கும் மருந்து

காட்டுக்கருணைக்கிழங்கு	பலம்	1
கரிக்கருணைக்கிழங்கு	,,	,,
காரக்கருணைக்கிழங்கு	,,	,,
புளிக்கருணைக்கிழங்கு	,,	,,

இவைகளை அரைத்து ஆட்டுமோரில் கலந்து 3 நாள் சாப்பிட்டு வர மூலம் ஆறும் நீங்கும்.

பித்தத்திற்குக் கியாழம்

ஆற்றுமணலை ஒரு பாண்டத்தில் வறுத்து அதன்மேல் முசுமுசுக்கையின் சார்பிழிந்து அரைபடி ஜலம் விட்டுப்பதமாகக்காய்ச்சி (3) நாள் சாப்பிட சர்வ பித்தமுந் தீரும் மயக்கம்போம்.

சர்வ வீக்கங்களுக்கும் கூழு

சங்கன்வேர்	பலம்	1/2
பச்சரிசி	படி	,,

இவைரெண்டையு மிடித்து கூழுபோல் காய்ச்சி குடிக்க சகலமான வீக்கங்களும் வாடும். ஆனால் மோர் விட்டுக் காய்ச்சவும்.

நீர் கட்டுக்குக் கியாழம்

பூனைக்கீரை	பலம்	1/4
நெரிஞ்சல்	,,	,,
சிறுகீரை	,,	,,
வெள்ளரிவிதை	,,	,,

இவைகளை ஒருபடி நீரில் போட்டு கால்படியாகச் சுண்டக்காய்ச்சி காலை மாலை யிருவேளையும் மூன்று நாள் சாப்பிட்டுக் கொண்டுவர நீர் கட்டானது தீர்ந்து தாராளமாய் நீரானது யிறங்கும்.

நீரிழிவுக்குக் கியாழம்

ஆவாரம்யிலை தூள்	பலம்	1/4
கல்மதம்	,,	,,
கொன்றைப்பட்டை	,,	,,
மிளகு	,,	,,

இவைகளை தட்டி ஒருபடி ஜலத்தில் போட்டுக் கால்படியாக வற்றக் காய்ச்சி காலை மாலை இருவேளையும் சாப்பிட நீரிழிவு நீங்கும்.

மேக சுரத்திற்கு கியாழம்

பனைவெல்லம்	பலம்	1/4
சுக்கு	,,	,,
நிலக்குமிழ்வேர்	,,	,,

இவைகளைத்தட்டி ஒருபடி ஜலத்தில்போட்டு காற்படியாக வற்றக் காய்ச்சி வடித்து சாப்பிட வெகுநாளாகத் தங்கியிருந்த மேக சுரமானது உடனே தீரும்.

தாது விருத்தி யுண்டாக

சீனா கற்கண்டு	பலம்	2
பேரீச்சம்பழம்	,,	,,

இவைகள் ரெண்டையும் கல்வத்திலிட்டு தேன் விட்டு மைபோல் அரைத்து வைத்துக் கொண்டு காலை மாலை புன்னைக்காயளவு சாப்பிட்டுக் கொண்டு வீரிய விருத்தி யுண்டாகும்.

மேகத்திற்குப் பச்சிலை

வன்னியிலையைப் பறித்து அம்மியில் வைத்து மை போல் அரைத்து எருமை தயிரில் புன்னக்காய் பிரமாணம் காலையில் (3) நாள் சாப்பிட மேகத்தினா லுண்டான வியாதிகள் தீரும் கடும் பத்தியம்.

மேகம் 21க்கும் மருந்து

வேளை யொன்றுக்கு கால் பலம் சிறுகுறிஞ்சான் வேரை எடுத்து மை போல் அரைத்து ஆழாக்கு தேங்காய்ப்பாலில் கரைத்து மூன்று நாள் காலையில் சாப்பிட மேகம் இருபத் தொன்றும் தீரும் இச்சாபத்தியம்.

வேறுமுறை மேகத்திற்கு மருந்து

பரங்கிப்பட்டையை பொடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக் கொண்டு வேளை யொன்றுக்கு இரண்டு காசியிடை ஆழக்குப் பசும் பாலில் போட்டுக் காய்ச்சிக் குடிக்க மேகம் (21) தீரும் இச்சாபத்தியம்.

சன்னிக்கு கியாழம்

முருங்கையீர்க்கு	பலம்	1/4
பச்சரிசி	,,	,,
நொச்சியிலை	,,	,,
பசுமுன்னை	,,	,,
ஈசுரமூலிவேர்	,,	,,

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதில் தட்ட வேண்டியதைத் தட்டி ஒருபடி சலத்தில் போட்டு கால்படியாக சுண்டக்காய்ச்சி வடித்து காலை மாலை இருவேளையும் சாப்பிட சன்னியானது அகன்று போகும்.

சுரத்திற்குச் சூரணம்

ஒரு பலம் புளிகரணையை நிறுத்தெடுத்து ஆவின்பாலில் அவித்து பொடியாக்கி வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொண்டு இரண்டு காசிடை சூரணத்தை தேனில் குழைத்துச் சாப்பிட சுரமகலும்.

பக்க வாதத்திற்கு கியாழம்

சுக்கு	பலம்	1/4
முக்காவேளை	,,	,,

இவை ரெண்டையும் தட்டி அரைபடி சலத்தில் போட்டு அரைக்கால் படியாய் வற்றக்காய்ச்சி வடித்துச் சாப்பிட பக்கவாய்வு, குன்மம் இவைகள் தீரும்.

இருமல் சுவாசத்திற்கு கியாழம்

தூதுவேளை	பலம்	1/4
சங்கங்குப்பி	,,	,,
அதிமதுரம்	,,	,,

இவைகளை ஒருபடி சலத்தில் போட்டு காற்படியாக வற்றக் காய்ச்சி 3-நாள் (6) வேளை சாப்பிட இருமல், சுவாசகாசம் இவைகள் தீரும்.

காசத்திற்கு மருந்து

ஒரு பிடி பூனைக் காலியிலையை பசும் வெண்ணையில் அரைத்து பாண்டத்திலிட்டு அடுப்பேற்றிக் கிளறி புன்னைக்காய் பிரமாணம் 3 நாள் சாப்பிட காசரோகமானது அகன்றுபோகும்.

இருமல் க்ஷயத்திற்குக் கியாழம்

இஞ்சி	பலம்	1/4
வெள்ளெருக்கன்பூ	,,	,,
மிளகு	,,	,,

இவைகளைத் தட்டிப்போட்டு அரைப்படி சலம் விட்டு அரைக்கால் படியாக வற்றக்காய்ச்சி காலை மாலை இருவேளையும் 3 நாள் சாப்பிட இருமல் க்ஷயந்தீரும்.

விக்கலுக்கு

ஒரு பலம் சடாமஞ்சளை நிறுத்தெடுத்து யெலுமிச்சம் பழம் ரசம் விட்டு மைபோல் அரைத்து தேனில் மத்தித்து 3 நாள் கொடுக்க விக்கல் நிற்கும்.

வேறு முறை விக்கலுக்கு

மயிலிறகைச் சாம்பலாக்கி அதில் ஒரு துளி தேன்விட்டு நாக்கில் தடவிக்கொண்டு வர விக்கல் நிற்கும்.

வாந்தி நிற்கக் கியாழம்

நெல்லியீர்க்கு	பலம்	1/4
திப்பிலி	,,	,,
சீரகம்	,,	,,
நெற்பொரி	,,	,,

இவைகளை ஒரு படி சலத்தில் போட்டு கால்படியாக வற்றக் காய்ச்சி 3 நாள் சாப்பிட வாந்தி நிற்கும்.

பாண்டுக்குப் பச்சிலை

ஒருபிடி கரிசலாங்கண்ணியும் கால்பலம் மிளகுஞ்சேர்த்து அரைத்து கடுக்காய் பிரமாணம் காலையில் மூன்று நாள் கொள்ள பாண்டு ரோகந் தீரும் இச்சா பத்தியம்.

பல்லு நோய்க்குக் கியாழம்

வெள்வேலம்பட்டை	பலம்	1/2
குமிழ்பட்டை	,,	,,
ஆலம்பட்டை	,,	,,

இவைகளை தட்டி இரண்டு படி சலத்தில் போட்டு ஒருபடியாகச் சுண்டக்காய்ச்சி 3 நாளைக்குக் காலையும் மாலையுங் கொப்பளித்து வர பல் நோய் தீரும் பல் உறுதிபடும்.

கைகால் பிடிப்புக்கு நீர்

வாதமடக்கி, நொச்சியிலை, பாவட்டை இவைகளை நீரிற்போட்டுக் காய்ச்சிபிடிப்புகள் மேல்விட பிடிப்பு வாங்கும். ஆனால் இம்மாதிரியாக முறையே எட்டு நாள் காலை மாலை வார்க்க வேண்டியது.

இரத்த காசத்திற்கு உருண்டை

ஆலம்விரை	பலம்	1/2
அத்திவிரை	,,	,,
நாவல்	,,	,,
அரசன்விதை	,,	,,
நிலைப்பனங்கிழங்கு	,,	,,
மான்கொம்பு	,,	,,
முருங்கைப்பூ	,,	,,
தூதுளம்பூ	,,	,,

இவைகளை நிறுத்தெடுத்து பசும்பால்விட்டு மைபோல் அரைத்து வைத்துக்கொண்டு கெச்சக்காய் பிரமாணம் காலை மாலை பத்து நாள் தேன் நெய் இவைகளில் மத்தித்துச் சாப்பிட ரத்தகாசந்தீரும் இச்சாபத்தியம்.

கரப்பானுக்கு மேல்பூசு மருந்து

ஏலம்	பலம்	1/4
சுக்கு	,,	,,
சீரகம்	,,	,,

இவை மூன்றையும் பொடித்து கால்படி நல்லெண்ணெயில் போட்டு ஒரு நாள் சூரியபுடம் வைத்து மறுநாள் யெடுத்து கரப்பான் மீதுப்பூசிக் கொண்டு வர ஆறியுலரும். ஆனால் மூன்று நாள் பூசிக்கொண்டு வர வேண்டும்.

சிரங்குங்குப் பூசு மருந்து

கருங்கம்பளியைச்சுட்டு நல்லெண்ணையிற் குழப்பி சிரங்குகளுக்கு பூசிவர ஆறியுலரும்.

காசத்திற்கு சூரணம்

இரண்டு பலம் பரங்கி சக்கையை யெடுத்து பசும்பாலில் அவித்தெடுத்து சூரணித்து வஸ்திர காயஞ்செய்து வைத்துக்கொண்டு காசியிடை ரெண்டு தேனில் மத்தித்துச் சாப்பிட பறந்து போகும்.

வயற்று வலிக்கு மருந்து

தேங்காயைத் திருகி பிட்டுவைத்து பர்பாடகத்தைப் பருப்பாக்கி இவைரெண்டையும் கலந்து இருவேளையுந் தின்றுகொண்டு வர வயற்றுவலி தீரும். ஆனால் முத்தினதேங்காயாய் இருக்கவேண்டும்.

மன்மத லேகியம்

தென்னம்பூ	பலம்	1/2
பனம்பூ	,,	,,
செண்பகப்பூ	,,	,,
கடுக்காப்பூ	,,	,,
நிருகாறப்பூ	,,	,,
மாம்பூ	,,	,,
கம்பு	,,	,,
கிராம்பு	,,	,,
காமப்பூ	,,	,,
கஞ்சாப்பூ	,,	,,

வில்வப்பூ	பலம்	1/2
கரிச்சாலைபூ	,,	,,
கண்டங்கத்திரிபூ	,,	,,
காட்டுஅத்திப்பூ	,,	,,
கரிவேலன்பூ	,,	,,
நெல்லிப்பூ	,,	,,
நீர்முள்ளிப்பூ	,,	,,
நெரிஞ்சிப்பூ	,,	,,
மல்லிகைப்பூ	,,	,,
மாதுளம்பூ	,,	,,
மருக்காரைப்பூ	,,	,,
ரோஜாப்பூ	,,	,,
ஆலம்விழுது துளிர்	,,	,,
சூரியகாந்திப்பூ	,,	,,
ஆவாரம்பூ	,,	,,
அமுக்கறாம்பூ	,,	,,
புங்கம்பூ	,,	,,
வேப்பம்பூ	,,	10
பொற்கரையான்பூ	,,	1/2
தாமரைப்பூ	,,	,,
தூதுளம்பூ	,,	,,
கொத்தமல்லி	,,	,,
துளசிவிரை	,,	,,
நீர்முள்ளிவிரை	,,	,,
சப்சாவிரை	,,	,,
கசகசா	,,	,,
சாதிக்காய்	,,	,,
வால்மிளகு	,,	,,
பூனைக்காலிவிரை	,,	,,
நாயுருவிவிரை	,,	,,
அரசம்பட்டை	,,	,,
மயிர்மாணிக்கம்	,,	,,
சாலாம்பிசினி	,,	,,
நன்னாரிவேர்	,,	,,
அதிமதுரம்	,,	,,
சுக்கு	,,	,,

இந்த நாற்பத்தேழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து உலர்த்தி சூரணித்து சீலையில் வடிக்கட்டி வைத்துக்கொண்டு ஒரு மண் பாண்டத்தில் அரைப்படி பசும்பால் விட்டு அடுப்பேற்றி தீமூட்டி யெரித்துக் கொண்டிருக்கையில் முன் யிடித்து வைத்திருக்கும் சூரணத்தை யெடுத்து பிள்ளை பெறாத மாங்கிலியஸ்திரியிடம் கொடுத்து சிறுகத் தூவிக்கொண்டு வரச் சொல்லி நீ ஜாக்கிரதையோடு கிளறிக்கொண்டு வந்து சூரணம் முழுமையும் ஆனவுடன் சாரப்பருப்பு கால்படி மாதுளம் பருப்பு உழக்கு திராட்சைப்பழம் பலம் 5 பேரீச்சம்பழம் பலம் 5 இவைகளைச் சேர்த்து நன்றாய்க் கிளறி அதில் கால்படி செவ்விளநீர் வார்த்து சீனி பலம் 5 போட்டு பனங்கற்கண்டு பலம் 5 சேர்த்து பசுவின் நெய்விட்டு கிளறி தேன் உழக்குவிட்டு அடிப்பிடிக்காமல் கிண்டி அடுப்பை விட்டுயிறக்கி மேல் மூடி வைக்கவும். ஆனால் யெரிக்கும்படியான விறகு ஒரே ஜாதியாயிருக்க வேண்டும். உபயோகம் இந்த லேகியஞ் சாப்பிடும்போது முதல் ஸ்தானஞ் செய்து மறுநாள் பேதிக்குச் சாப்பிட்டு மைந்தாநாள் முதல் லேகியத்தை புன்னைக்காயளவு 40 நாள் சாப்பிடவும் இந்த 40 நாளும் இச்சாபத்தியமாக யிருக்க வேண்டும். காலை, மாலையும் பால், தயிர், நெய் இவைகளைக் கொள்ளவேண்டும். யெண்ணை கடுகு கூடாவாம் முக்கியமாய் ஸ்திரிபோகம் பொடி சுருட்டு லாகிரி வஸ்துக்களை நீக்கப்பட்டதாம்.

நீரொழுக்கு ஆராத யிரணங்களுக்கு குப்பைமேனிச் சூரணம்

குப்பைமேனியிலையைக் கொண்டு வந்து நிழலுலர்த்தி சூரணித்து அத்துடன் சமமாகக் கருஞ்சீரகத்தைச் சூரணித்துக் கலந்து வைத்துக் கொண்டு 40 நாள் சாப்பிட்டுக் கொண்டு வர பித்தம், வாய்வு இவைகளைப் போக்கும் பசியுண்டாகும் மந்தம் தீரும் ஆறாத விரணங்கள் ஆறியுலரும்.

பவுத்திரங் கண்டமாலைக்குப் பத்து

அமுக்கிறாங்கிழங்கு	பலம்	1
பெருங்காயம்	,,	,,

இவைரெண்டையும் சந்தனக் கல்மேல் வைத்து கோழி முட்டை வெள்ளம்பிலியை விட்டு மைபோல் அரைத்து வழித்து அரையாப்பு, புண், கண்டமாலை பவுத்திரம் இன்னும் பலவிதமான மேகவிரணங்களுக்கு மேல்பூசிக் கொண்டு வர ஆறியுலரும்.

பவுத்திரங் கண்டமாலைக்கு விருத்தம்

வகுக்கக்கேள் கண்டமாலைபவுத்திரங்கள்
வலுமையுள்ளவிப்புருதி வீக்கந்தானும்
தொகுக்கக்கேள் துடைவாழைபுண்கூலைத்தான்
தொந்திரவுசெய்யும் பிளவைவீக்கத்தோடு
மிகுத்திட்ட அரையாப்பு மூன்றுமெய்யா
வேதனைகள் செய்யாம லுடைந்துப்போக
பகுக்கக்கேளதற்குறிய மருந்தைநீயும்
படியினிலே கூறுவேன் பரிந்துதானே.

இதுவுமது

பரிந்துடனே அமுக்கறாங் கிழங்கினோடும்
பாசமுள்ளபெருங்காய மிரண்டுங்கொண்டு
தெரிந்திடவே கோழிமுட்டை தன்னைவாங்கி
திகழுமதின்வெள்ளாம்பல் தன்னைவிட்டு
நெரிந்திடவேசந்தனக்கல் தனிலுரைத்து
நேமமாய்மைபோலே வாரிக்கொண்டு
சொரிந்திடவேயப்புண் மேற்கனமாய்பூசிச்
சொலப்போகுங்கஷாயத்தின் சூட்க்ஷங்களே.

இதுவுமது

கேளப்பாசுரசநாங்கண்ணி சாற்றிற்
கீர்த்தியுள்ளகற்றாழை மடலைச்சீவி
வெளப்பாவுள்ளிருக்குஞ் சோற்றைத்தானும்
விதமாகவெடுத்தந்த சாற்றிற்சேர்த்து
நாளப்பாயிரவியினி காயவைத்து
நன்றாகப்பத்து பலமானபோது
ஆளப்பாதிருகடுகு திருபலாதி
அதைக்கொண்டு வருத்திடித்து வதனிற்சேரே.

சேர்த்திந்தவகைகளெல்லா மொன்றாகத்
தீயினிலேகாயவைத்து மெழுகதாக
பார்த்ததனையிறக்கி கொண்டுடனேகேளாய்
புகருஞ்சக்கரை பலந்தான் பத்தகொண்டு

கீர்த்தியுடனதிற்கலந்து எட்டொன்றாக்கி
கேளப்பாசாடியினில் வைத்துக்கொண்டு
பூர்த்தியாய்ப் புன்னக்காயளவதாகப்
புண்ணியனே மண்டலந் தானொன்றுகொள்ளே.

மண்டலந்தானானொன்றுக் கிருபோதாக
மாராமலரையருந்த மந்தாய்கேளாய்
கண்டமாலைகள் பவுத்திரம் வீக்கம்தானும்
கட்டியதோர் துடவாழை அரையாப்போடு
கொண்ட புண்புரைகளெல்லாங் கெதிகெட்டோடும்
குருவாகவதை யெண்ணி செய்திட்டாலே
அண்டிடாதெப்போது மாய்ந்துபாறாய்
அப்பனே யாயிசெல்லு மதியிதாமே.

கட்டுவாதி லேகியம்

சீமை அதிவிடையம்	விராகனிடை	3
கடுக்காய்ப்பூ	,,	,,
மாசிக்காய்	,,	,,
மாதுளம்பழத்தோல்	,,	,,
ஜாதிக்காய்	,,	,,
லவங்கப்பட்டை	,,	,,
போஸ்தக்காய்	,,	,,
கசகசா	,,	,,
மாங்கொட்டைபருப்பு	,,	,,
புளியங்கொட்டை தோல்	,,	,,
அபினி	,,	1 1/2
கோரோசனம்	,,	,,
நெல்லவெல்லம்	பலம்	,,
பசுநெய்	,,	3

இவையை பாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றி வெல்லத்தைப்போட்டு இவைரெண்டும் கலந்து பாகு ஆகும்போது மேற்படி தினுசுகளை சூரணஞ் செய்து வைத்துக் கொண்டிருந்து பாகில் சிறுக சிறுகப் போட்டுக் கிளறி லேகியம்போல் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆகும் பெரியவர்களுக்கு சுண்டக்காய் பிரமாணமும் குழந்தைகளுக்கு துவரை பிரமாணமும் காலையில் கொடுக்கவும். மூன்று வேளையில் சீதக்கழிச்சல் ரெத்தமந்தம் அல்லது அஜீரணம் இவைகள் நிற்கும்.

மதன காமேசுர லேகியம்

அதிமதுரம்	பலம்	1
அபினி	,,	,,
முள்வேலம்பிசினி	,,	,,
கசகசா	,,	,,
செண்பகப்பூ	,,	,,
மிளகு	,,	,,
சிறுநாகப்பூ	,,	,,
ஜாதிக்காய்	,,	,,
லவங்கப்பத்திரி	,,	,,
தாளிச்சபத்திரி	,,	,,
பெருஞ்சீரகம்	,,	,,
திராக்ஷைபழம்	,,	,,
உளுந்து	,,	,,
தக்கோலம்	,,	,,
அசுவகெந்தி	,,	,,
கொத்தமல்லி	,,	,,
லவங்கப்பட்டை	,,	,,
ஏலம்	,,	,,
திப்பிலி	,,	,,
கிராம்பு	,,	,,
சுக்கு	,,	,,
வால்மிளகு	,,	,,
தான்றிக்காய்	,,	,,
நெல்லிக்காய்	,,	,,
கடுக்காய்	,,	,,
ஜாதிபத்திரி	,,	,,
கோஷ்டம்	,,	,,
கருஞ்சீரகம்	,,	,,
கஸ்தூரிமஞ்சள்	,,	,,
நீர்முள்ளிவித்து	,,	,,
நிலப்பனங்கிழங்கு	,,	,,

இவைகளை நிறுத்தெடுத்து வறுக்கவேண்டியதுகளை வறுத்து பொடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு இதற்குச்சரியிடையாய்

கெஞ்சாவை நிறுத்தெடுத்து நல்ல சலத்தில் (7) தரங்கழுவி எடுத்து விரை காம்பு முதலானதும் நீக்கி நாலு படி சலத்தில் ஒரு படி பசுவின் நெய்விட்டு அதில் கெஞ்சாவைப்போட்டு நன்றாய்க்காய்ச்சி சிட்டிக் கட்டி நெய்யை அயச் சட்டியில் பிழிந்துகொண்டு மற்ற நெய்யும் கையால் நன்றாய் வழித்தெடுத்துக் கொண்டு பசும்பால் அரைப்படி சக்கரைப்பலம் (60) ஒன்றாய்விட்டு அடுப்பிலேற்றி பாகுபதத்தில் சூரணங்களைக் கொட்டி நெய்யைவிட்டு லேகியப்பதமாகக் கிளறியிறக்கி வைத்துக்கொண்டு இரவில் புசித்தான பிறகு (1) விராகனிடை முதல் (3) கால் விராகனிடை வரையில் புசிக்கலாம் வீரியம் அதிகரிக்கும் திரேகம் சிவந்து வரும் கண் குளிர்ந்து பிரகாசிக்கும் யீளை யிருமல் மந்தம் சூளை பழையசுரம் க்ஷயம் இவைகள் நீங்கும் திரேக ஆரோக்கியமும் மனதிடமும் உண்டாகும்.

மேகம் உகக்கும் லேகியம்

செகப்புநாயுருவிவேர்	பலம்	1/2
செகப்புநெரிஞ்சிவேர்	,,	,,
கையாந்தகரைவேர்	,,	,,
மாவிலங்கின்வேர்	,,	,,
மிளகரணைவேர்	,,	,,
சிவன்வேம்புவேர்	,,	,,
காட்டுக்கருணை வேர்	,,	,,
நீர்முள்ளிவேர்	,,	,,
வில்வவேர்	,,	,,
துத்திவேர்	,,	,,
வெள்ளெருக்கன்வேர்	,,	,,
சிதேவிசெங்கழனிவேர்	,,	,,
நிலைமந்தம்வேர்	,,	,,
வெள்ளைவிஷ்ணுகாந்திவேர்	,,	,,
ஆனைநெரிஞ்சிவேர்	,,	,,
பொன்னாங்கண்ணிவேர்	,,	,,
உப்பிலாங்கொடிவேர்	,,	,,
அவுரிவேர்	,,	,,
முடக்கத்தான்வேர்	,,	,,
புங்கன்வேர்	,,	,,
கருவூமத்தன்வேர்	,,	,,
எட்டிவேர்	,,	,,

ஆடுதின்னாம்பாளைவேர்	,,	1/2
விலாரிவேர்	,,	,,
சிறுகட்டிக்கொடிவேர்	,,	,,
ஆலம்பட்டை	,,	,,
பூமிசக்கரைகிழங்கு	,,	,,
மருதம்பட்டை	,,	,,
பூவரசன்பட்டை	,,	,,
செங்கரிந்தாபட்டை	,,	,,
பாவட்டையிலை	,,	,,
புளிக்கருணைகிழங்கு	,,	,,

இந்த முப்பத்திரெண்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து உலர்த்தியிடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு ஒரு பாண்டத்தில் அரைவீசை பசும் நெய்யைவிட்டு அடுப்பிலேற்றி நெய்யுரிகின உடன் சருக்கரை பலம் பத்துப்போட்டு பாகுபதத்தில் மேல்படி சூரணத்தை சிறுக சிறுக தூவிக்கொண்டே கிளற வேண்டியது நெய்போதாவிட்டால் முன் பாகக்காச்சி யேடுகட்டிய பசும்பால் போதுமான மட்டும் நிதானமாய் விட்டுக் கொண்டு கிளறவும் இறக்கும்போது மலை தேன் (5) பலம் விரையில்லாத பழைய திராட்சைப்பழம் பலம் (5) பொடியாக்கி சுத்திகரித்த பாதம் பருப்பு பலம் (5) போட்டுக் கிண்டி வைத்துக் கொள்ளவும் கற்பு தோன்றாமல் தின்பதற்கு இனியதாகவும் வியாதியைக் கண்டிக்கும், தன்மையுள்ள லேகியம் மென்றறியவும் காலை மாலை இருவேளையும் புன்னைக்காய் வீதம் (2, 10) சாப்பிடவும். மீன் கருவாடு இறைச்சி லாகிரிஸ்ரீபோகம், புகை சுருட்டு இவைகள் கூடாது. மேகம் (2, 10) தீரும். கருமேகத்தையும் தீர்க்கும் இச்சாபத்தியம்.

இரச ஔஷதஞ் சாப்பிட்டதினால் உண்டாகிற உமிழ் நீர் சுரப்பிக்கும் ஈரில் உண்டாகும் புண்களுக்கும் மருந்து.

ஒரு துண்டு காசுக்கட்டியை வாயிலிட்டு வைத்துக் கொள்ள வேண்டும். இப்படி தினம் இரண்டு மூன்று தரம் செய்யலாம் தொண்டை நோவுக்கு நல்லதாயிருக்கும். மிகுந்த நாற்றமானப் பழுப்புடனே யிருக்கிற பழைய புண்களுக்கு ஒரு திறாம் காசு கட்டியை ஒரு அவுன்ஸ் மெழுகு பிளாஸ்திரியில் சேர்த்துயிட வேண்டும். இதுவுமன்றி (6) திறாம் காசு கட்டியை அரைப்புட்டிக் கொதிக்கிற சலத்திலிட்டு ஆறினபின் வடிகட்டிப் புண்களைக் காலையிலுஞ் சாயந்தரமும் கழுவினாலுங் குணமுண்டாகும்.

முலைக்காம்பில் வரும் ரணங்களுக்கும் நன்று முலைகாம்பில் ரணமிருக்குஞ் ஸ்திரீகள் பிரசவிக்கின்றதற்கு இரண்டுமாதத்திற்கு முன் முலைக் காம்புகளிலும் முலைகளிலும் மேற்படி தண்ணீரைத் தொட்டுவைத்தால் குழந்தை பால் குடிக்கிற சமயமாகும்போது இரணம் உண்டாகாது. பல்குழிந்தும் அதற்குள் தசைவளர்ந்து மிருக்கிற பல்வலிக்கு ஒரு துண்டுக்காசுக் கட்டியை அந்தக் குழியில் திணித்தாலும் வாயிலிட்டு ஒதுக்கிக் கொண்டாலும் சுகத்தைக் கொடுக்கும்.

திரேகத்தில் யெங்கேயாகிலும் கொப்பளமுண்டாக்க

சிவந்த சித்திரை மூலம் வேரைப்பறித்தவுடன் அதின் தோலை யுரித்துக் கொஞ்சம் கஞ்சித் தண்ணீர் விட்டு கட்டியாய் அரைத்து ஒருதுண்டு துணியில் தடவிக் கொப்பள முண்டாக்க வேண்டிய யிடத்தில் வைத்துக் கட்டவேண்டும் கட்டி (5) மினிட்டு நேரஞ்சென்ற பொழுது எறிவும் வலியு முண்டாகி அது அரைமணிவரை அதிகரித்திருக்கும். இதன்பின் அதையெடுத்துவிட்டால் எறிவும் வலியுந் தணிந்து அப்புறம் (10, 2) அல்லது (10, 8) மணிநேரத்தில் பெரிய கொப்பளமுண்டாகும். இதிலுண்டாயிருக்கிற சலத்தைக் குத்தியெடுத்துவிட்டு ஒரு வாழையிலை துண்டை வைத்து கட்ட வேண்டும். புண் சுருக்காய் ஆறிப்போகும். இப்படி கொத்த கொப்புள முண்டாக்கும் ஔஷதங்களை கொடுக்க இருமலுக்கு நெஞ்சிலும் தலைவலிக்கும் மற்ற நோய்களுக்கும் கழுத்தின் பிடறியிலும் வைத்துக் கட்டினால் நன்று.

இரணங்களுக்கு மருந்து

சிறு குறட்டாய்வேரைத் தூளாயிடித்து வேப்பெண்ணையிற் கலந்து கெட்டப் புண்களுக்குப் பூசினால் விலைப் பெற்றப் பரிகாரமாய்க் காணப்படும் சில சமையத்தில் காதிலுள்ள புண்ணும் ஆறும் மூக்கிலுள்ளப் புண்களுக்கும் உபயோகிக்கப்படும்.

படர்தாமரைக்கு மருந்து

சீமை அகத்தியிலையைப் பறித்து அரைத்து அதற்குச் சமனிடை மெழுகுபிளாஸ்திரி அல்லது தேங்காயெண்ணையிற் சேர்த்துத் தினந்தோறும் இரண்டு தரம் அழுத்தி தேய்த்து வர தோலைப்பற்றிய படர்தாமரை நீங்கும்.

தாமரை
நூலகம்